மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்

## Children's Voices for Human Rights



Courtesy: http://www.who.int/heca/en/

குழந்தைகளின் வாழ்விடங்கள், கற்கும் இடங்கள் மற்றும் விளையாடும் இடங்களில்
குழந்தைகளின் சுகாதாரத்திற்குத் தீங்கு ஏற்படும் வகையில் உள்ள
சுற்றுச்சூழல் அபாயங்களைக் குறைப்பதற்காக ஒரு உலகளாவிய கூட்டணி.



Courtesy: http://www.gietrust.org/?p=765

"நமது குழந்தைகளின் அறக்கட்டளை"
ஒரு புதிய சட்டக் கட்டமைப்பிற்காக வழக்காடுகிறது.
இந்தக் கட்டமைப்பின் மூலமாக பூமிப்பந்தின்
தலைவிதியை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்கிறது.
இந்த பூமிப்பந்தை நிலைத்து நிற்கச் செய்து பின்வரும்
சந்ததியினர் உயிர்த்திருப்பதை உறுதிசெய்யும்
பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்ததாகும்.




Courtesy: http://www.slideshare.net/tanmays/visual-art-gallery-of-tanmay

குழந்தைகளை மையமாகக் கொண்ட
இயற்கையின் பல்லுயிர்ப் பெருக்கம்

மனித உரிமைகளுக்கான குழந்தைகளின் குரல் - 72 - 2015

# கொள்கை அறிக்கைக்கான அடிப்படைகள்*

*18 வயது வரையில் குழந்தைகளை அனைத்து வகையான வேலைகளிலும் ஈடுபடுத்துவதற்கு தடை விதிக்கும் சட்டத்திற்காக*

**1986ம் ஆண்டின் குழந்தைத் தொழிலாளர் முறை (தடுப்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தை நீக்குவதற்காக**

1. அரசமைப்பு சாசனத்தின் சரத்து 24ல் திருத்தம் செய்வதற்கான ஒரு விரிவான கொள்கை ஆவணத்தைத் தயாரித்தல்; அதில் ஒவ்வொரு குழந்தையும் (விதிவிலக்கின்றி) 18 வயது வரையில் குழந்தைத் தொழிலாளர்களாக வேலையில் ஈடுபடுத்தப்படுவதற்குத் தடை என்பது அடிப்படை உரிமையாக்கப்பட வேண்டும். குழந்தைத் தொழிலாளர் என்பதற்கான நிலைகள் அதில் விரிவாக விளக்கப்பட வேண்டும். வேலையில் ஈடுபடுத்தப்படும் குழந்தைகளுக்கு எதிரான கொடுமைகள் வகைப்படுத்தப்பட வேண்டும். அனைத்து வகையான வேலைகளிலும் குழந்தைகள் 18 வயது வரையில் ஈடுபடுத்தப்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறிப்பிடப்பட வேண்டும்.

2. அனைத்து வகையான வேலைகளிலும் 18 வயது வரையிலான குழந்தைகளை ஏன் ஈடுபடுத்தக்கூடாது என்பதற்கான காரணங்கள் (நோக்கங்களும் காரணங்களும்).

3. அனைத்து வகையான வேலைகளிலும் 18 வயது வரையில் குழந்தைகளை ஈடுபடுத்துவது என்பது ஒரு குற்றச் செயலாகும். அது கைது நடவடிக்கைக்குரிய குற்றமாக கருதப்பட வேண்டும்.

4. 1986ம் ஆண்டுச் சட்டத்தை அகற்றி அதற்கு பதிலாக உருவாக்கப்படும் புதிய சட்டத்தின் அடிப்படையாக பாதுகாப்பு, மேம்பாடு, நீதி, சம உரிமைகள் ஆகியவை இருக்க வேண்டும். இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். அனைத்து வகையான வேலை அல்லது வேலைக்கான ஈடுபாட்டில் 18 வயது வரையிலான குழந்தைகள் பயன்படுத்தப்படுவதற்கான தடை புதிய சட்டத்தில் இருக்க வேண்டும்.

5. குழந்தைத் தொழிலாளர், வேலையில் ஈடுபடுத்தப்படும் குழந்தைகள், வேலையளிப்பவர் என்பதற்கான விளக்கங்கள் மிக முக்கியமானவையாகும். இதில், குழந்தைகளின் வீடு சார்ந்த வேலை மற்றும் குடும்பம் சார்ந்த வேலை மற்றும் பள்ளிக்குச் செல்லாத குழந்தைகள், சுய வேலை வாய்ப்பில் உள்ள குழந்தைகள் ஆகிய விளக்கங்களும் இடம் பெற வேண்டும். நிறுவனம் என்பதை வரையறுப்பதற்கான தேவை சட்டத்தில் மிகவும் வரம்புக்குட்பட்டதாக இருக்கக் கூடும். ஆகவே, அது குறித்து மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

6. 18 வயது வரையில் ஒரு குழந்தையை வேலையில் அமர்த்துவது அல்லது ஈடுபடுத்துவது வன்கொடுமைக் குற்றமாக (பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் பிரிவு 3(1), (2) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைக்குரிய வன்கொடுமைகளைப் போல) வரையறுக்கப்பட வேண்டும், அதற்கான தனி அத்தியாயம் இருக்க வேண்டும். அதேபோல், குழந்தைகளை வேலையில் ஈடுபடுத்துவோருக்கான தண்டனைகளும், இதுதொடர்பாக தனது கடமைகளை நிறைவேற்றத் தவறுகிற அரசு ஊழியருக்கான தண்டனைகளும் (பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் பிரிவு 4ல் உள்ளது போல) வரையறுக்கப்பட வேண்டும்.

7. 18 வயது வரையில் இலவச, கட்டாய, சமமான, தரமான கல்வி பெறும் உரிமை அரசமைப்பு சாசனத்தில் அடிப்படை உரிமையாக இருப்பது தொடர்பான ஒரு நிலைக்குறிப்பை வரையறுக்கும் தனி அத்தியாயம் தேவை. அது, குழந்தைப் பருவத்தின் ஆரம்பக் கால பராமரிப்பு, கற்றல், மேம்பாடு (ஒரு வகுப்பின் ஒவ்வொரு பிரிவையும் சேர்ந்த ஒவ்வொரு குழந்தைக்கும்; குழந்தைப் பருவத்தின் தொடக்கம் முதல் மேல்நிலைப் பள்ளிக் கல்வி வரை அனைத்து வகையான (வாரிய) பள்ளிக் கல்வி முறைகளுக்கும்) உரிய உரிமைகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இந்த உரிமைகள் குழந்தைத் தொழிலாளர் என்பதை வரையறுப்பதன் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதில், 18 வயது வரையில் குழந்தைகளை ஈடுபடுத்துவது என்பது அவர்களுக்கான கல்வியை மறுப்பதாக கருதப்பட வேண்டும். கல்விக்கான அடிப்படை உரிமையையும், 18 வயது வரையில் கல்வி மற்றும் குழந்தைத் தொழிலாளர் முறை தடுப்புக்கான உரிமையையும் இணைக்கிற அத்தியாயம் அவசியமாகும்.

8. ஐ.நா. குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கைக்கான பிரிவு (UNCRC) 32, இந்திய அரசமைப்பு சாசனத்தின் 14, 19, 24, 21, 21 (a), 39(f), எம்.சி. மேத்தா எதிர் தமிழ்நாடு அரசு வழக்கின் தீர்ப்பு ஆகியவற்றை ஆய்வு செய்கையில் இந்திய அரசமைப்பு சாசனம் குழந்தைகளை வேலைக்கு நியமிக்கப்படுவதை சட்டவிரோதமானதாக அறிவித்துள்ளது என்ற சட்டப்பூர்வ விளக்கங்கள் கிடைக்கின்றன. அரசமைப்பு சாசனத்தில், சரத்து 24 மற்றும் 21(A)யில் 18 வயது வரை குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதை தடை செய்வதற்கான திருத்தங்களுக்கான வாதம் அல்லது பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

9. வேறு பல சட்டங்களில் உள்ள முரண்பாடுகள் பட்டியலிடப்பட வேண்டும். 14 வயது வரை வேலையில் நியமிக்கத் தடை (சரத்து 24), 14 வயது வரை கல்விக்கான உரிமை (சரத்து 21(A)) என குழந்தைகளுக்கான வேலை நியமனத் தடையை 14 வயது வரையில் சுருக்குகிற சட்டங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டும். அனைத்து குழந்தைகளும் 18 வயது வரையில் அனைத்து விதமான வேலைகளிலும் ஈடுபடுத்தப்படுவதை தடை செய்வதற்கு ஏற்ற வகையிலும், இந்தச் சட்டங்கள் அனைத்தும் குழந்தைகளின் நலனுக்காக சிறப்பான முறையில் பயன்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் இந்த மாற்றங்கள் தேவைப்படுகின்றன.

10. மாநில அரசின் கடமைகளும் பொறுப்புகளும்

(a) வேலையளிப்பவர் மட்டுமின்றி, 18 வயது வரையில் குழந்தைகள் அனைத்து விதமான வேலைகளிலும் ஈடுபடுத்தப்படுவதற்கும், அவ்வாறு ஈடுபடுத்துகிற வன்கொடுமை குற்றத்திற்கான தண்டனைகளுக்கும் அரசுதான் முதன்மையான பொறுப்பேற்க வேண்டும். இது சட்டத்தில் வலுவாக முன்வைக்கப்பட வேண்டும்.

(b) சட்டமீறலுக்காக விசாரணை விரைவாக நடப்பதையும், கடுமையான தண்டனைகள் வழங்கப்படுவதையும், சில குறிப்பிட்ட நிலைமைகளில் குறிப்பிட்ட கால அளவுக்கான சிறைத் தண்டனை வழங்குவது உட்பட, உறுதிப்படுத்துவது அரசின் பொறுப்பாக இருக்க வேண்டும்.

11. இந்தச் சட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன்பாக இடைக்காலத்தில் வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழந்தைகளின் உரிமைகள், கல்வி மறுப்பு முதலியவை கொள்கையிலும் சட்டத்திலும் விரிவாகச் சொல்லப்பட வேண்டும்.

12. மீட்பு, மறுவாழ்வு, இழப்பீடு, ஒப்படைப்பு, சேத இழப்பீடு முதலியவற்றுக்கான ஏற்பாடுகள், உரிய அதிகாரப் பொறுப்புடன், இந்த கொள்கை மற்றும் சட்டத்தில் விரிவாகச் சொல்லப்பட வேண்டும். குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு சிறார் நீதி முறையின் கீழ் கொண்டு வருவது தவிர்க்கப்பட வேண்டும்.

13. 18 வயது வரையில் குழந்தைகளை வேலையில் நியமிப்பதற்குத் தடை என்பது ஒரு சட்டமாக அறிவிக்கப்பட்ட பின், வேலையில் உள்ள குழந்தைகளின் உரிமைகள் கொள்கை மற்றும் சட்டத்தில் குறிப்பாகக் கூறப்பட வேண்டும்.

14. 18 வயது வரையில் அனைத்து வகையான வேலைகளிலும் குழந்தைகள் அமர்த்தப்படுவதை தடுப்பதிலும், கல்வி, மறுவாழ்வு, இழப்பீடு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதிலும், சேத இழப்பீடு, ஒப்படைப்பு, குழந்தைப் பருவ மீட்பு முதலியவற்றை உறுதிப்படுத்துவதிலும் பல்வேறு அதிகார அமைப்புகளின் பங்கு குறித்து விரிவாக குறிப்பிடப்பட வேண்டும். குறிப்பாக உள்ளாட்சி அமைப்பின் பங்கும் விரிவாக சொல்லப்பட வேண்டும்.

15. குழந்தைத் தொழிலாளர் தடை சட்டம் வெவ்வேறு பிரிவுகளுக்காக வெவ்வேறு தேதிகளில் அறிவிக்கப்படலாம். ஆனால், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சட்டம் நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து அதிகபட்சமாக 180 நாட்களுக்குள் முழு அறிவிக்கை வெளியிடப்பட வேண்டும். சட்டத்தின் மிக முக்கியமான பிரிவுகள் (18 வயது வரையில் அனைத்துக் குழந்தைகளையும் வேலையில் நியமிப்பதற்குத் தடை, தடைச் சட்டம் வந்த பிறகும் தொடர்ந்து குழந்தைகளை வேலையில் ஈடுபடுத்துகிற நிலையில் வன்கொடுமை குற்றங்களுக்காக வேலை அளிப்போர்/இடத்தில் தொழில் நடத்துவோர் மீது தண்டனை நடவடிக்கைகள் உள்பட) நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும். நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு உரிய ஏற்பாடுகளையும், அதிகார அமைப்புகளையும், நிறுவன அமைப்புகளையும் ஏற்படுத்த அரசுக்கு உரிய அவகாசம் கொடுப்பதற்காகவே இந்த ஏற்பாடு.

(இத்தகைய ஏற்பாடுகள் குறித்து 2005ம் ஆண்டின் தகவல் உரிமைச் சட்டம் செயல்பாட்டிற்குக்

கொண்டுவரப்பட்ட நடைமுறைகளிலிருந்து அறியலாம்).

16. 2014ம் ஆண்டின் குழந்தைத் தொழிலாளர் தடைச் சட்டத்தில் உள்ளபடி, 18 வயது வரையில் குழந்தை உழைப்பை தடை செய்யும் சட்டங்களில் திருத்தங்கள் செய்யப்பட்ட பிறகு (கொத்தடிமை தொழிலாளர் தடுப்புச் சட்டம், குழந்தைகள் கடத்தப்படுதல் தடுப்புச் சட்டம், தொழிற்சாலைகள் சட்டம் உள்ளிட்ட) இதர சட்டங்களின் கீழ் வரும் சட்டச் செயலாக்க அதிகார அமைப்புகள், தங்களது சட்டங்களின் கீழ் இந்த விதிகளை செயல்படுத்த பொறுப்பேற்க வேண்டுமா அல்லது 2014ம் ஆண்டின் குழந்தைத் தொழிலாளர் தடைச் சட்டத்தின் கீழ் வரும் செயலாக்க அதிகார அமைப்புதான் இந்த விதிகளை செயல்படுத்துவதற்கு முழு பொறுப்பு ஏற்க வேண்டுமா என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

17. 18 வயது வரையில் குழந்தைகளை அனைத்து விதமான வேலைகளில் ஈடுபடுத்தப்படுவது குறித்து, தொழிற்சாலை ஆய்வாளர் போன்ற வழக்கமான அதிகாரிகள்தான் புகார் பிரிவு செய்ய வேண்டும் என்று இல்லாமல், அரசின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்பதும் இல்லாமல் குற்றவியல் நடுவர்கள் முன்னிலையில் வழக்குத் தொடுக்கப்படுகிற/புகார் பதிவு செய்கிற அதிகாரம் குடிமைச் சமூக அமைப்புகள் அல்லது தனி மனிதர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

18. குறைந்தபட்ச வயது தொடர்பான சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ஐ.எல்.ஓ.) 138வது உடன்படிக்கை இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அனைத்துவிதமான வேலைகளிலும் (விதிவிலக்கின்றி) நியமிக்கப்படுவதற்கான குறைந்தபட்ச வயது 18 என வலியுறுத்துவதற்கு அந்த உடன்படிக்கை பயன்படுத்தப்பட வேண்டும். ஐ.எல்.ஓ. உடன்படிக்கை அங்கீகரிப்பதும் வேலைக்கான வயது குறித்த சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதும் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புக்கான கொள்கையின் ஒரு முக்கியப் பகுதியாக இடம் பெற வேண்டும். இரண்டாவதாக, மோசமான குழந்தைத் தொழிலாளர் வடிவங்கள் குறித்த ஐ.எல்.ஓ. 182வது உடன்படிக்கை ஏற்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இது ஏற்கத்தக்கதல்ல, அவ்வாறு ஏற்பது என்பதை எதிர்த்தாக வேண்டும்.

19. 18 வயது வரையிலான குழந்தைகள் அனைத்து விதமான வேலைகளிலும் ஈடுபடுத்தப்படுவது தொடர்பான முழு விவரங்களை, பொது மக்கள் எளிதில் பெறத்தக்க வகையில், ஆண்டுக்கு இரண்டுமுறை மத்திய அரசும் மாநில அரசுகளும் வெளியிடுவது அவசியம் என்பது கொள்கை அறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டும். குழந்தைத் தொழிலாளர் தொடர்பான விவரங்கள் அனைத்தும் அரசு மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கான தகவல் உரிமை சட்டத்தின் கீழ் வலைத்தளத்தில் வெளியிடப்பட வேண்டும். இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறை, தேசிய முன்மாதிரி ஆய்வு (என்.எஸ்.எஸ்.) விவரங்கள், கல்வி விவரங்கள் உள்ளிட்ட தொடர்பான வருடாந்திர அறிக்கைகளிலும் இடம் பெற வேண்டும்.

20. மனித மேம்பாட்டு குறியீட்டெண் என்ற கண்ணோட்டத்தில் இதர நாடுகளோடு ஒப்பிட்டுக் காட்டும் அறிவியல்பூர்வ விளக்கங்களும் கொள்கை அறிக்கையில் இடம் பெற வேண்டும். இதர தெற்காசிய நாடுகளோடு ஒப்பிடுகையில் இந்தியா இதில் பின்னடைந்த நிலையில் இருப்பது இதன் மூலம் தெரிய வரும். குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு என்பது நீடித்த வளர்ச்சி என்பதற்கான கொள்கைத் திட்டத்தோடு இணைந்ததாகும். அந்த உறுதியான வளர்ச்சி என்பது மனித மேம்பாட்டு குறியீட்டெண்ணுடன் இணைந்து செல்வதாக அல்லது அதற்கு மேம்பட்டதாக இருக்க வேண்டும்.

21. புலம்பெயர்ந்த, வெளியேற்றப்பட்ட, வெள்ளம் – பஞ்சம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட, (இயற்கையான மற்றும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட) பேரிடர்களால் பாதிக்கப்பட்ட, உடல் சார்ந்த இயலாமைகளால் பாதிக்கப்பட்ட, பட்டியல் வகுப்பினரைச் சேர்ந்த, பட்டியல் பழங்குடியினரைச் சேர்ந்த, எச்.ஐ.வி./எய்ட்ஸ் பாதிப்புக்கு உள்ளாகிய அல்லது கிருமிகள் தொற்றியிருக்கக்கூடிய, மாற்றுப் பாலினத்தவராக உள்ள, இன்னபிற குடும்பங்களையும் சமூகங்களையும் சார்ந்த குழந்தைகளின் குறிப்பான பிரச்சனைகளை முன்னிலைப் படுத்துவதாகவும் இந்தக் கொள்கை அறிக்கை அமைய வேண்டும்.

---

* மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF) மற்றும் குழந்தை உழைப்பு எதிர்ப்பு பிரச்சாரம் (CACL) அமைப்பின் தேசிய செயற்குழு இணைந்து 2011 டிசம்பர் 19 அன்று சென்னையில் நடத்திய கலந்தாய்வுக் கூட்டத்தில் இறுதிப்படுத்தப்பட்டது.

# கண்ணுக்குப் புலப்படாத தொழிலாளர்கள்

– திவ்யா திரிவேதி

*வீட்டுப் பணியாளராக வேலை செய்த ஒரு சிறுமிக்கு, வீட்டு உரிமையாளரால் செய்யப்பட்ட கொடுமை, நமது வீடுகளில் வேலை செய்கிறவர்களைப் பாதுகாக்கக்கூடிய சட்டம் எதுவும் இல்லாதது ஏன் என்ற கேள்வியை எழுப்ப வைக்கிறது*

**அச்சமூட்டும் எண்ணிக்கை**

- வீட்டுப் பணியாளர்கள்: **37** லட்சம்
- இவர்களில் **90** சதவீதம் பேர் பழங்குடியினர்
- தில்லியில் மட்டுமே வீட்டுப் பணியாளர்களுக்கான **2,000** ஏஜென்சிகள் இருக்கின்றன.
- கடந்த ஆண்டு மட்டுமே ஒரு என்.ஜி.ஓ. அமைப்பால் மீட்கப்பட்ட பெண் குழந்தைகள் **130** பேர்.

வீட்டு வேலை என்பது ஒரு வேலையாக ஒரு போதும் இந்தியாவில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. எப்போதுமே அது பெண்ணின் வேலையாகவே இருந்து வந்திருக்கிறது. மனைவி, தாய், மகள் அல்லது சகோதரியின் வேலையாகவே இருந்து வந்திருக்கிறது. அவர்களுக்கு என ஊதியம் எதுவும் கிடையாது. இந்தப் பின்னணியில் வீட்டுப் பணியாளராக வேலை செய்கிற ஒருவருக்கு மிக சொற்பமான பணமே கூலியாகத் தரப்படுகிறது என்பதில் வியப்பேதும் இல்லை. சமையல், வீட்டைத் தூய்மைப்படுத்துதல், குழந்தைகளைப் பராமரித்தல் ஆகிய எல்லாமே மிகுந்த பயிற்சித் திறன் தேவைப்படுகிற வேலைகள். ஆனால், இன்னும் அவை முறைசாரா தொழில்கள் பிரிவுகளில்தான் வருகின்றன. இவர்களது உரிமைகளைப் பாதுகாக்க சட்டம் எதுவும் கிடையாது. இவர்களுக்கென காப்பீட்டுத் திட்டம் எதுவும் கிடையாது. ஓய்வூதியமும் கிடையாது. வீட்டுப் பணியாளர்களுக்கு என தனிச் சட்டம் எதுவும் இல்லாததன் காரணமாக, பணியிடத்தில் அத்துமீறல்களுக்கு அல்லது உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாகிறபோது நீதி பெறுவதற்கான வழி ஏதும் இவர்களுக்கு இல்லாமல் போகிறது.

சில குறிப்பான சம்பவங்கள் நடக்கிறபோது சில குறிப்பிட்ட சட்டங்களை பயன்படுத்த முடியும்தான். உதாரணமாக பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் தடுப்புச் சட்டம், முறைசாரா தொழிலாளர் சமூகப் பாதுகாப்புச் சட்டம் – 2008, சிறார் நீதிச் சட்டம் போன்ற சட்டங்களை பயன்படுத்த முடியும். ஆனால், அந்தந்த சட்ட வரம்புக்குள்தான் பயன்படுத்த முடியும். மத்திய தொழிலாளர் துறை அமைச்சகத்தால் வீட்டுப் பணியாளர்கள் குறித்த ஒரு தேசிய கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால், இன்னும் அது சட்டப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. வீட்டுப் பணியாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியங்களை கர்நாடக அரசும் கேரள அரசும் அறிவித்தன. தமிழ்நாட்டில் வீட்டுப் பணியாளர்கள் உடல் உழைப்பாளர்கள் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர். ஏற்கெனவே உள்ள ராஷ்டிரிய ஸ்வாஸ்த்யா பீமா யோஜனா திட்டத்தை வீட்டுப் பணியாளர்களுக்கும் விரிவுபடுத்த சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அது செயலுக்கு வரவில்லை. 2011ல் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) வீட்டுப் பணியாளர்கள் மாநாடு ஒன்றை நடத்தியது. அந்த மாநாட்டிற்கு ஆதரவு தெரிவித்த இந்திய அரசு இன்னும் அதன் தீர்மானத்தை அங்கீகரிக்கவில்லை. ஒரு தனிச்சட்டம் இன்னும் கொண்டுவரப்படாததற்கான ஒரு முக்கிய காரணம் தில்லியிலும் மற்ற இடங்களிலும் இருக்கக்கூடிய, சட்டங்களை இயற்றும் அதிகாரம் படைத்தவர்கள் தங்களது வீடுகளிலேயே வேலைக்கு ஆட்களை நியமித்திருப்பதுதான். அத்தகைய வீட்டுப் பணியாளர்களை பாதுகாப்பதற்கான சட்டம் கொண்டுவருவது என்பது இவர்களது சுயநலன்களுக்கு எதிரானதாக இருந்துவிடுமே... முறைசாரா பிரிவின்கீழ் இந்தத் தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டிருப்பதால், வீட்டு உரிமையாளருக்கும் ஒரு தொழிலாளிக்கும் ஏதேனும் பிரச்சனை ஏற்படுகிறது என்றால், தொழிலாளர் நீதிமன்றத்தை அந்தத் தொழிலாளி நாட முடியாது. ஏனென்றால், அந்தப் பெண் சட்டநுணுக்கப்படி "தொழிலாளி" என்று அங்கீகரிக்கப்பட்டவரல்ல. நாடு சுதந்திரமடைந்ததிலிருந்தே கொண்டுவரப்பட்ட தொழிலாளர் சட்டங்கள் அனைத்துமே முறைசார் தொழில்களைச் சார்ந்த தொழிலாளர்களுக்காக உருவாக்கப்பட்டவைதான். நாட்டின் ஒட்டுமொத்தத் தொழிலாளர் எண்ணிக்கையில், இத்தகைய முறைசார் பிரிவினரின் பங்கு வெறும் 5 சதவீதம்தான்," என்கிறார் வீட்டுப் பணியாளர்களை அணிதிரட்டியுள்ள நிர்மலா நிகேதன் அமைப்பைச் சேர்ந்த சுபாஷ் பட்நாஹர்.

15 மாநிலங்களைச் சேர்ந்த 20 அமைப்புகள் பங்கேற்றுள்ள வீட்டுப் பணியாளர்களுக்கான தேசிய மேடை சார்பில் அண்மையில், இவர்களுக்கென ஒரு விரிவான சட்டம் தேவை எனக் கோரும் ஒரு மனு அரசிடம் அளிக்கப்பட்டது. தன்னாட்சி அதிகாரம் கொண்ட சட்டப்பூர்வ முத்தரப்பு வாரியம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும், அதில் வேலை அளிப்பவரும் வீட்டுப் பணியாளரும் இவர்களுக்கான

ஏஜென்சியும் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும் என்று இந்த மேடை கோரியுள்ளது. "வீட்டிலேயே முழு நேரமும் தங்கியிருக்கும் தொழிலாளி, மூடப்பட்ட கதவுகளுக்கு உள்ளே பல்வேறு விதமான அத்துமீறல்களுக்கு உள்ளாகிற வாய்ப்பு அதிகம். இதற்கு, வேலை அளிப்பவர் பொறுப்பாக்கப்பட வேண்டும். அவர் தனது பணியாளருக்குத் தருவது போன்ற ஒரு மாத ஊதியத்தை ஆண்டுக்கு ஒருமுறை வாரியத்திடம் செலுத்த வேண்டும். பணியாளரின் உடல்நலத்தை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பரிசோதிப்பது, அவரது தங்குமிடம், பேறுகாலச் செலவு, விபத்து சிகிச்சை செலவு, ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு பலன்களை கிடைக்கச் செய்வது வாரியத்தின் பொறுப்பாக இருக்க வேண்டும்," என்கிறார் பட்நாகர். ஒரு ஓட்டல் அறையில் ஒரு நாள் தங்கிச் செல்பவரின் விவரங்கள் காவல்துறைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அப்படி இருக்கும்போது வீட்டுப் பணியாளர்களைப் பதிவு செய்வதில் என்ன சிக்கல் இருக்க முடியும் என்று அவர் கேள்வி எழுப்புகிறார்.

இதே கருத்தை இந்திய சமூக ஆய்வுகள் நிறுவனத்தின், மகளிர் ஆய்வுத் துறையைச் சேர்ந்த ஆய்வாளர் ரேணுகா ராமானுஜம் வலியுறுத்துகிறார். "வேலை அளிப்பவருக்கும் பணியாளருக்குமிடையே ஒரு ஒப்பந்தம் இருக்கிறது என்று வைத்துக்கொண்டால்கூட, ஒரு சட்டம் என்பது இல்லாத நிலையில் அந்த ஒப்பந்தத்தை சட்டப்பூர்வமாக செயல்படுத்த இயலாது," என்கிறார் அவர். இத்தகைய பெண்களில் 90 சதவீதம் பேர் தலித் மற்றும் பழங்குடி சமூகங்களைச் சேர்ந்தவர்களாவர். சத்தீஸ்கர், ஒடிசா, ஜார்கண்ட், மேற்கு வங்கம், அசாம் ஆகிய மாநிலங்களிலிருந்து புலம்பெயர்ந்து வந்தவர்கள் இவர்கள். வாழ்வாதாரத்திற்கு வழி தேடி தங்கள் சொந்த ஊரைவிட்டு வெளியேறுகிறவர்கள் இவர்கள். கடுமையான வறுமைதான் இவர்களை மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயரச் செய்கிறது என்று சுட்டிக்காட்டுகிறார் சமூக நடவடிக்கைக்கான சேசு சபை அமைப்பைச் சேர்ந்த பாதிரியார் சன்னி பய். மேலும் இவர், "அசாம் மாநிலத்தில் தேயிலைத் தோட்டங்கள் மூடப்படுகின்றன. சத்தீஸ்கர் மாநிலத்தில் ஆதிவாசிகள் தங்கள் நிலங்களை இழந்து வருகிறார்கள். பட்டினி கிடந்து சாவதா, அல்லது தில்லிக்கு புலம் பெயர்வதா என்ற இரண்டில் ஒன்றை முடிவு செய்ய வேண்டியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள்," என்கிறார். வீட்டுப் பணிகளுக்கான ஏஜென்சிகளை நடத்துவோர் அதிகக் கூலி கிடைக்கும் என்று ஆசை காட்டிதான் இத்தகைய குடும்பங்களை ஈர்க்கிறார்கள். ஆனால், உண்மை என்னவென்றால், தலைநகரத்திலேயே கூட, சட்டப்பூர்வ குறைந்தபட்சக் கூலிக்கும் குறைவாகவே இங்குத் தொழிலாளர்களுக்கு கூலி தரப்படுகிறது. ஆதிவாஸ் ஜீவன் விகாஸ் சன்ஸ்தா என்பது ஒரு ஏஜென்சி. 70 வீட்டுப் பணியாளர்கள் இருக்கிறார்கள். ஒப்பந்த முறை மூலம் பல வீடுகளில் இவர்களை இந்த ஏஜென்சி வேலைக்கு அனுப்புகிறது. 11 மாதங்களுக்கான அந்த ஒப்பந்தம் நம்பிக்கையின் அடிப்படையிலும், பேச்சுவார்த்தையின் அடிப்படையிலும் செய்து கொள்ளப்படுகிறது. மாதம் ரூ.5,000 சம்பளம் நிர்ணயிக்கப்படுகிறது. இத்தகைய ஏற்பாடுகள் இருந்த போதிலும் இந்தப் பணியாளர்கள் பல இடங்களில் மோசமாக நடத்தப்படுகிறார்கள். "முதல் 15 நாட்கள் எங்களை நன்றாகத்தான் நடத்துகிறார்கள். அதன்பிறகுதான் ஒடுக்குமுறைகள் ஆரம்பமாகின்றன," என்று கூறுகிறார் முன்னாள் வீட்டுப் பணியாளரும், தற்போது சன்ஸ்தா நிறுவனத்தில் இருப்பவருமான புஷ்பா. "தொடக்கத்தில் எங்களுக்கு என்னென்ன வேலைகள் என்று நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால், நாட்கள் போகப் போக அவர்கள் எங்களை எல்லா விதமான வேலைகளையும் செய்ய வைக்கிறார்கள். சில நேரங்களில் நாங்கள் உறங்கி எழுவதற்குக் கூட முறையான இடம் இருப்பதில்லை. அவர்களுக்காக நாங்கள் தயார் செய்யும் உணவுகளை நாங்கள் சாப்பிட அனுமதிப்பதில்லை. எங்களுக்காக ஒதுக்கப்பட்ட தட்டுகளில் ஊசிப்போன உணவுகளைத்தான் நாங்கள் சாப்பிட வேண்டும் என்கிறார் புஷ்பா. இது ஒரு மாறுபட்ட வடிவத்திலான தீண்டாமைக் கொடுமைதான் என்று சொல்ல வேண்டியதில்லை. "இவர்கள் தலித் சமூகங்களையும் ஆதிவாசி சமூகங்களையும் சேர்ந்தவர்கள்தான் என்ற மனநிலை வேலையளிப்பவர்களுக்கு இருக்கிறது. பிறகு எப்படி இவர்கள் அவர்களுடைய சோஃபாக்களில் அமர்ந்து, அவர்களுக்கான உணவையே சாப்பிட முடியும்," என்று கேட்கிறார் பாதிரியார் பய்.

வீட்டு வேலைகளில் ஈடுபடுத்தப்படும் பெண் குழந்தைகள், அவர்களது எஜமானர்களுக்கு முதலில் உடம்பு பிடித்துவிடுமாறு கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். பின்னர், பாலியல் உறவுகளுக்கும் வற்புறுத்தப்படுகிறார்கள் என்று தெரிவிக்கிறார் சிஸ்டர் சோபியா. வீட்டுப் பணியாளர்களுக்காக செயல்பட்டு வருபவர் இந்த கன்னித் துறவி. இந்த விஷயத்தை வெளியே சொல்ல பெண் குழந்தைகள் பயப்படுகிறார்கள். தான் பழிவாங்கப்படலாம் அல்லது அவமானப்படுத்தப்படலாம் என்ற அச்சத்தில் அவர்கள் மௌனமாக தொல்லையைத் தாங்கிக்கொள்கிறார்கள். இளம் பெண்கள், அன்னையர்கள், கணவனை இழந்தவர்கள் உள்ளிட்ட இத்தகைய பெண்கள் வேலை தேடி கூட்டம் கூட்டமாகவே வருகிறார்கள். இவர்களுக்கும் இவர்களது குழந்தைகளுக்கும் தேவையான உள்கட்டுமான வசதிகளைச் செய்து கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பு. இவர்களுக்கு பாதுகாப்பாக இருப்பதற்கான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். இவர்களது நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால், இவர்களையும் இவர்களது உரிமைகளையும் அங்கீகரிக்கிற ஒரு சட்டம் இயற்றப்படாமல் எதுவும் நடக்கப்போவதில்லை.

**ஆதாரம்: The Hindu, 13.10.2014**

# ஜூன் 12: உலக குழந்தை உழைப்பு எதிர்ப்பு தினம்

## குழந்தை உழைப்பு எதிர்ப்பு பிரச்சாரம் (CACL) ஏற்பாடு செய்த வட்ட மேசை ஆலோசனைக் கூட்டத்தின்

## அறிக்கை

**பாஜக – தேஜகூ அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத் திருத்த முன்வரைவை விலக்கிக்கொள்க. CACL உருவாக்கிய, 18 வயது வரையில் அனைத்து வகையான வேலைகளிலும் குழந்தை உழைப்பு தடுப்புக்கான மக்களின் மாற்று சட்டமுன்வரைவை அங்கீகரித்திடுக.**

புதுதில்லியில் உள்ள அரசமைப்பு சாசன அரங்கத்தில் ஒரு வட்ட மேசை விவாதக் கூட்டத்திற்கு CACL ஏற்பாடு செய்திருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், வழக்குரைஞர்கள், குழந்தை உரிமை இயக்கத்தினர், தேசிய தலித் உரிமைகள் பிரச்சார அமைப்பின் தலைவர்கள் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர். 70க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந்த வட்ட மேசைக் கூட்டம், அனைத்து வகையான வேலைகளிலும் 18 வயது வரையில் குழந்தை உழைப்புக்குத் தடை விதிப்பதற்கான மக்களின் மாற்று சட்டமுன்வரைவுக்கு முன்னிலைப்படுத்தப்பட்டது. குடும்பத்துடன் வேலை செய்வது, குடும்பத் தொழிலில் ஈடுபடுவது, விவசாயம் மற்றும் வன சேகரிப்பு போன்ற வேலைகளில் ஈடுபடுவது ஆகியவையும் இதில் உள்ளடங்கும்.

கொத்தடிமைத் தொழிலாளர் விடுதலை முன்னணியின் அமைப்பாளர் சுவாமி அக்னிவேஷ், தேசிய தலித் நீதிக்கான இயக்கத்தின் பொதுச் செயலாளர் V.A.ரமேஷ்நாதன், தலித் ஆர்த்திக் அண்டோலன் – தேசிய தலித் மனித உரிமைகள் பிரச்சாரத்தின் பொதுச் செயலாளர் திரு. பால் திவாகர், குழந்தை உரிமைகளுக்கான HAQ அமைப்பின் இனாக்ஷி கங்குலி, இந்திய குழந்தை உரிமைகள் கூட்டமைப்பின் ரஷ்யா இமானுவேல் ஆகியோரும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், மத்திய தொழிற்சங்கங்களைச் சேர்ந்தோரும் இந்த மாற்று சட்டமுன்வரைவை ஏற்றுக்கொண்டனர். CACL தயாரித்த இந்த மக்களின் மாற்று சட்டமுன்வரைவை அரசாங்கமும் அரசியல் கட்சிகளும் ஏற்கச் செய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள், வல்லுநர்கள், குடிமைச் சமூக இயக்கங்கள், பல்வேறு கூட்டமைப்புகள் ஆகியவற்றிற்கிடையே சாத்தியமான அளவிற்கு ஒரு விரிவான கூட்டு உருவாக வேண்டியதன் அவசியத்தை அவர்கள் ஒப்புக்கொண்டனர். 1986ம் ஆண்டின் குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்திற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தத்திற்கு அமைச்சரவை அளித்துள்ள ஒப்புதலை விலக்கிக்கொள்ள வேண்டும் என்றும் பாஜக – தேஜகூ அரசை பிரதிநிதிகள் ஏகமனதாக வலியுறுத்தினர். பாஜக அரசு கொண்டு வருகிற சட்டத்திருத்த முன்வரைவு, இதற்கு முன் 2012ல் அன்றைய 2ம் ஐமுகூ அரசு கொண்டு வந்த சட்டமுன்வரைவிலிருந்து எவ்வகையிலும் மாறுபட்டுவிடவில்லை. பாஜக அரசின் சட்டமுன்வரைவு 14 வயது வரையிலான குழந்தைகளை வேலைகளில் நியமிக்க தடைவிதிக்கிறது. ஆனால், குழந்தைகள் கைவிடப்படுவதற்கும், அடிமை முறை தொடர்வதற்கும் மற்றொரு எடுத்துக்காட்டாக, குடும்பம் / வீடு சார்ந்த வேலைகளிலும், குடும்பத் தொழில்களிலும், விவசாய வயல்களிலும், வன சேகரிப்பிலும், பொழுதுபோக்குத் தொழிலிலும் குழந்தைகளை ஈடுபடுத்த அது அனுமதிக்கிறது. பாஜக அரசு தனது சட்டமுன்வரைவை விலக்கிக்கொள்ள வேண்டும் என்று பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டனர். அதற்கு பதிலாக, 18 வயது வரையில் குழந்தைகளை வேலைகளில் ஈடுபடுத்துவதற்கு தடை விதிக்கும் வகையில், CACL தயாரித்த மாற்று சட்டமுன்வரைவை அங்கீகரிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். கல்வி உரிமைச் சட்டத்தை விரிவுபடுத்தி 18 வயது வரையில் இலவச, கட்டாய, சமமான மற்றும் தரமான கல்வியை உறுதிப்படுத்தும் வகையில் பள்ளிக் கல்வி உரிமைச் சட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று அரசாங்கத்திற்கும் அரசியல் கட்சிகளுக்கும் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்தனர். குழந்தைத் தொழிலாளர் முறை சட்ட விரோதமானது என இந்திய அரசமைப்பு சாசனம் கூறுகிறது. ஆனால், அதற்கு மாறாக 1986ம் ஆண்டின் சட்டம் குழந்தைத் தொழிலாளர்

முறையை சட்டப்பூர்வமானதாக்குகிறது. ஐக்கிய நாடுகளின் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கையின் மாநாட்டின் (UNCRC) 32வது சட்டஉரை, 18 வயது வரையில் குழந்தைகள் பொருளாதாரச் சுரண்டலுக்கு உட்படுத்தப்படுவதற்கு தடை விதிக்கிறது. இந்திய அரசமைப்பு சாசனம் குழந்தைத் தொழிலாளர் முறையை முழுவதும் நீக்கிவிட வேண்டும் என்பதே எமது நிலைபாடு. அதே வேளையில் இந்திய அரசமைப்பு சாசனத்தின் 24, 21A ஆகிய சட்டக்கூறுகளில் உடனடியாக திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையில் கூடிய மத்திய அமைச்சரவையால் மே 2015ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள சட்டத்திருத்த முன்வரைவு – 2012, யு.என்.சி.ஆர்.சி. உடன்படிக்கையின் முதல் சட்டஉரையை அப்பட்டமாக மீறுகிறது. இந்தச் சட்டத்திருத்த முன்வரைவு, குழந்தை என்பதை வரையறுக்கிறபோது 14 வயது நிரம்பாதவர் என கூறுகிறது. மேலும், 15 முதல் 18 வரையிலான குழந்தைகள் விடலைப் பருவத்தினர் என வரையறுக்கப்பட்டிருப்பதையும் இது மீறுகிறது. மேலும், யு.என்.சி.ஆர்.சி. உடன்படிக்கையின் 32வது சட்ட உரையையும் இது மீறுகிறது. உடன்படிக்கையின் முதல் சட்டஉரையோடு இணைந்ததாக இந்த 32வது சட்ட உரை குழந்தைகள் பொருளாதாரீதியாக சுரண்டப்படுவதற்குத் தடைவிதிக்கிறது. இந்த இரண்டு காரணத்திற்காகவே மேற்படி சட்ட முன்வரைவு நிராகரிக்கப்பட வேண்டும். அதற்கு பதிலாக, அனைத்து வகையான வேலைகளிலும் 18 வயது வரையில் குழந்தை உழைப்பைத் தடை செய்யும் விரிவான ஒரு சட்டத்தை மத்திய அமைச்சரவையும் நாடாளுமன்றமும் அங்கீகரிக்க வேண்டும். இதற்கான சட்டமுன்வரைவை தயாரித்து விரிவாக சுற்றுக்குவிட்டுள்ளது.

தற்போதுள்ள சட்டத்தில் உள்ள தண்டனை விதிகள் பலவீனமாக உள்ளன. இந்தச் சட்டத்தை செயல்படுத்துவதற்கான அதிகார அமைப்புகள் வெளிப்படைத் தன்மையோடு இல்லை. எனவே, அவற்றால் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க முடியாது. இந்தச் சட்டத்தின்கீழ் குறிப்பிடப்படும் அனைத்துக் குற்றச் செயல்களும், வேலையளிப்போர், நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள், வர்த்தக இடத்தில் தொழில் நடத்துவோர், முகவர்கள், ஒப்பந்ததாரர்கள் உள்ளிட்டோர் மீதான கைது நடவடிக்கைக்கு உரியவையாகவும் ஜாமீனில் விடுவிக்க இயலாதவையாகவும் மாற்றப்பட வேண்டும். குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான அத்தியாயம் எதுவும் இந்தச் சட்டத்திருத்த முன்வரைவில் இல்லை. அத்துடன், 18 வயதிற்குக் கீழ் வேலை செய்வதாக கண்டறியப்படும் குழந்தைகளுக்கான இழப்பீடு, மறுவாழ்வு, நிவாரணம், உரியவர்களிடம் ஒப்படைத்தல், சேதங்களுக்கான இழப்பீடு, குழந்தைத் தொழிலாளர் நலநிதி உள்ளிட்டவை குறித்த அத்தியாயமும் சட்டமுன்வரைவில் இல்லை.

## CACL தயாரித்த குழந்தை உழைப்பு தடுப்புக்கான மக்களின் மாற்று சட்டமுன்வரைவின் சுருக்கம்

18 வயது வரையில் அனைத்துக் குழந்தைகளையும் அனைத்து வகையான வேலைகளிலும் ஈடுபடுத்துவதை தடுப்பதற்காகவும், 18 வயது வரையில் அல்லது 12ம் வகுப்பு வரையில் இலவச, கட்டாய, தரமான மற்றும் சமமான கல்வி உரிமையை உறுதிப்படுத்துவதற்காகவும் இந்தக் குழந்தை உழைப்பு தடுப்புக்கான மக்களின் மாற்று சட்டமுன்வரைவு.

### பிரிவு 2 முக்கிய விளக்கங்கள்:

- **“குழந்தை”** என்பதன் பொருள் தனது 18 வயதை நிறைவு செய்யாத ஒரு ஆண்/பெண் என்பதாகும்.

- **“குழந்தைத் தொழிலாளர்”** என்பதன் பொருள், ஒரு வேலையளிப்பவரால் நேரடியாக அல்லது ஒப்பந்ததாரர் மூலமாக, முகவர் மூலமாக இடத்தைப் பிடித்திருப்பவர் மூலமாக அல்லது வேறு எந்த இடைத்தரகர் மூலமாக எந்த ஒரு வேலையிலும் ஈடுபடுத்தப்படும் எந்த ஒரு குழந்தை அல்லது கூலிக்காகவோ அல்லது கூலியில்லாமலோ வேலை அளிப்பவரால் அல்லது ஒப்பந்ததாரரால் பண ஆதாயத்திற்காகவோ அல்லது அதற்காக அல்லாமலோ, தற்காலிக தொழிலாளி அல்லது வீட்டுப்பணியாளர் அல்லது பணியாளராக, எந்த ஒரு தொழிற்சாலை, வேலைகள், விவசாயம் மற்றும் அது சார்ந்த நடவடிக்கைகள் உள்ளிட்ட நடைமுறைகள், நிறுவனம், கிட்டங்கி, பணிமனையில் நியமிக்கப்படும் எந்த ஒரு குழந்தை என்று பொருள்படும் : வீடு சார்ந்த அல்லது குடும்பம் சார்ந்த குழந்தையின் கல்வி உரிமையிலும் வழக்கமான பள்ளிக்கு செல்வதிலும், குழந்தையின் ஓய்விலும் குறுக்கிடக்கூடிய மற்றும்/அல்லது குழந்தையின் உடல் நலத்திற்கு ஆபத்தான மற்றும் தீங்கான மற்றும்/அல்லது குழந்தையின் உடல் சார்ந்த, மனம் சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த, அறநெறி சார்ந்த அல்லது

சமூகம் சார்ந்த வளர்ச்சிக்கு தீங்கான எந்த ஒரு வேலையிலும் ஈடுபடுத்தப்படும் குழந்தை என்றும் பொருள்படும்.

- **குழந்தைத் தொழிலாளர் முறை** என்பது அனைத்து வகையான அடிமை முறை என்று வரையறுக்கப்பட்டுள்ள மோசமான குழந்தை உழைப்பு முறைகள் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுதல், கடனுக்காக கொத்தடிமை முறை, கட்டாயப்படுத்தப்படும் உழைப்பு, ஆயுத மோதல்களில் குழந்தைகளைக் கட்டாயமாக ஈடுபடுத்துதல் உள்ளிட்டவையும் ஆகும் என பொருள்படும். வீடு சார்ந்த மற்றும் குடும்பத்தால் நடத்தப்படும் நிறுவனம் சார்ந்த வேலைகளில் ஈடுபடுத்தப்படும் குழந்தைகளும் குழந்தைத் தொழிலாளர்களே ஆவர். வீட்டுப் பணியாளர்களாக உள்ள குழந்தைகளுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும்.

- **"வேலை அளிப்பவர்"** என்பதன் பொருள் ஒரு குழந்தையை வேலைக்கு வைக்கிற முதலீட்டாளர் உள்பட அத்தகைய வேலையில் முழுமையான கட்டுப்பாடு உள்ள, நிறுவனத்தின் உரிமையாளர், கைவசப்படுத்தியிருப்பவர், மேலாளர், ஒப்பந்ததாரர் அல்லது அவர்களது முகவர்கள் அல்லது நிறுவனத்தின் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கு பொறுப்பான எந்த நபரும் என்பதாகும்.

## பிரிவு 3. குழந்தைகளைப் பணியில் அமர்த்துவதற்கானத் தடை

- எந்த ஒரு குழந்தையும் 18 வயதுவரையில் எந்தவிதமான பணியிலும் ஈடுபடுத்தப்படக் கூடாது. 18 வயது வரையிலான அல்லது 12ம் வகுப்பு வரையில் அனைத்துக் குழந்தைகளுக்கும் எந்த ஒரு அருகாமைப் பள்ளியிலும் இலவச, கட்டாய, தரமான, சமமான கல்வி பெறும் உரிமை, ஒரு பள்ளியிலிருந்து வேறொரு பள்ளிக்கு மாறுவதற்கான உரிமை உண்டு.

- வேலை அளிப்பவர் அல்லது தொழில் நடத்துபவர் எவரும் எந்த ஒரு நிறுவனத்திலும் அல்லது எந்த ஒரு வேலை இடத்திலும் எந்த ஒரு குழந்தையையும் எந்த ஒரு வேலையிலும் ஈடுபடுத்தக்கூடாது. அவ்வாறு ஈடுபடுத்துவது எந்த ஒரு குழந்தையையும் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு உட்படுத்துவதும் குழந்தையின் கல்வி உரிமையை மறுப்பதும் ஆகும்.

- எந்த ஒரு குழந்தையையும் எந்த ஒரு நபராலும் பின்வரும் நோக்கங்களுக்காக வாய்ப்பளிக்கப்படவோ, கொண்டு போய் நிறுத்தப்படவோ, கடத்தப்படவோ கூடாது:
    - (a) கொத்தடிமை வேலை அல்லது கட்டாய வேலை;
    - (b) பாலியல் தொழில், ஆபாசப் படம் தயாரிப்பு அல்லது ஆபாசச் செயல்களில் ஈடுபடுத்தப்படுவது;
    - (c) குறிப்பாக போதை மருந்துகள் தயாரிப்பு மற்றும் கடத்தலுக்காக, குறிப்பிட்ட காலத்தில் நடைமுறையில் இருக்கிற எந்த ஒரு சட்டத்திலும் உள்ளபடி, சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுதல்;
    - (d) குழந்தையின் உயிர், உடல்நல பாதுகாப்பு, கல்வி அல்லது அறநெறிகளுக்கு தன் இயல்பிலேயே அல்லது சந்தர்ப்ப சூழல்கள் காரணமாக தீங்கு விளைவிக்கக்கூடிய வேலையில் ஈடுபடுத்தப்படுதல்;

## பிரிவு 4. இலவச, கட்டாய, தரமான, சமமான கல்விக்கான உரிமை

- ஒரு ஒற்றை மாநில கல்வி வாரியத்தின் கீழ் பொதுப் பள்ளி முறையும் அருகாமைப் பள்ளி முறையும் இந்த உரிமையும் அடிப்படையாக இருக்கும்.

- இந்த உரிமையானது குழந்தை முன்பருவ பராமரிப்பு, வளர்ச்சி, பள்ளிக்கு முந்தைய கல்வி (கற்றல்) ஆகியவற்றையும் 6 வயது வரையில் (0 – 6 ஆண்டுகள்) உறுதிப்படுத்துகிறது.

## பிரிவு 5. சட்டத்தை செயல்படுத்துவதற்கான அதிகார அமைப்புகள்

- மத்திய, மாநில அளவில் உரிய ஒரு குழுவை உரிய அரசாங்கம் நியமிக்கும். அந்தக் குழு குழந்தைத் தொழிலாளர் கண்காணிப்புக்குழு என்று குறிப்பிடப்படும்.

- மாநில கண்காணிப்புக் குழுவின் செயல்பாடு(கள்) என்பது குழந்தைத் தொழிலாளர் முறை தடுப்பு தொடர்பான கண்காணிப்பு மத்திய,

மாநில அரசுக்கு உரிய ஆலோசனை கூறுவதாகும்.

**5A. மாவட்ட நடவடிக்கைப் படைக் குழு**

- குழந்தைத் தொழிலாளர்களை அடையாளம் காணுதல், மீட்புக்கு முந்தைய திட்டமிடுதல், மீட்பு நடவடிக்கை, இடைக்கால பராமரிப்பு, கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம் – 1976 உள்ளிட்ட அனைத்து பொருத்தமான சட்டங்களின் கீழ் வேலையளிப்போர்/மீறுவோர் மீது வழக்குத் தொடுக்கப்படுதல் ஆகிய அனைத்து செயல்பாடுகளையும் கண்காணிக்கவும் மேற்பார்வையிடவும் மாவட்ட அளவிலான நடவடிக்கைப் படை.

- கண்காணிப்புக் குழுவிற்கு உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் இருக்க வேண்டும். வழக்குகள் தாக்கல் செய்வதற்கான அதிகாரம் இந்தக் குழுவிற்கு இருக்க வேண்டும்.

**பிரிவு 6. குழந்தைத் தொழிலாளர் தடுப்பு அலுவலர்(கள்)–வட்டார அளவில் (ஊராட்சி ஒன்றியம், நகராட்சி அல்லது மாநகராட்சி)**

- காவல்துறையின் அதிகாரிக்கு உள்ளது போன்ற அதிகாரங்களுடன் குழந்தை உழைப்பு தடுப்பு அலுவலர் நிபந்தனைகளுக்கும் வரம்புகளுக்கும் உட்பட்ட வகையில் அந்த அதிகாரங்களைச் செயல்படுத்துவார்.

- சம்பந்தப்பட்ட குழந்தையோடு அல்லது பெற்றோரோடு அல்லது பாதுகாவலரோடு அல்லது பொது மக்களில் ஒருவரோடு, நீதிமன்றத்தை நாடும் அதிகாரம் குழந்தை உழைப்பு தடுப்பு அலுவலருக்கு உண்டு.

**பிரிவு 7. குழந்தைத் தொழிலாளர் தடுப்பு ஆய்வாளர்**

- இந்திய தண்டனைச் சட்டத்திற்கு உட்பட்ட வகையில் ஒரு அரசு ஊழியராகக் கருதப்படும் ஆய்வாளர்களை தேவைப்படும் எண்ணிக்கையில் உரிய அரசாங்கம் நியமிக்கும்.

  **ஆய்வாளர்களுக்கு பின்வரும் அதிகாரங்கள் உண்டு:**

  குழந்தைத் தொழிலாளர்களை நியமிக்கப் பயன்படுத்தப்படுகிற அல்லது அவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்று ஆய்வாளர் நம்புவதற்குக் காரணம் உள்ள எந்த ஒரு இடத்திற்கு செல்வதற்கு அவர் பொருத்தமானவர் என்று கருதக்கூடிய அரசாங்கப் பணியில் இருக்கக்கூடியவர்கள், அல்லது உள்ளூர் அதிகாரி அல்லது இதர அரசு அதிகாரி ஆகிய உதவியாளர்களுடன் (அல்லது வல்லுநருடன்) நுழைவதற்கான அதிகாரம்.

- எந்த ஒரு தொழிற்சாலை, சுரங்கம், தோட்டம், தொழிலகங்கள், விவசாயம் உள்ளிட்ட நடைமுறைகள் மற்றும் அது சார்ந்த செயல்பாடுகள், நிறுவனம், பண்டக சாலை, கிட்டங்கி, பணிமனை அல்லது வீடு சார்ந்த வேலையை ஆய்வு செய்வதற்கான அதிகாரம்.

- குழந்தைத் தொழிலாளரால் ஆதாயமடையும் பிரதான வேலையளிப்பவர், பணித்தலத்தில் தொழில் நடத்துபவர் மற்றும்/அல்லது இடைத் தரகர் அல்லது முகவரை ஆய்வாளர் கண்டுபிடிக்க வேண்டும். அவர்கள் மீது பிரிவு 7ல் உள்ள விதிகளின் கீழ் வழக்குத் தொடர வேண்டும். 24 மணி நேரத்திற்குள் குழந்தைத் தொழிலாளர் தடுப்பு அலுவலருக்கு ஆய்வாளர் அறிக்கை அனுப்ப வேண்டும்.

**8. நடைமுறைகளும் தண்டனைகளும்**

- எந்த ஒரு வேலைத் தலம் அல்லது நிறுவனத்தில் எந்த ஒரு குழந்தையையும் வேலையில் ஈடுபடுத்துதல், இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத ஆனால், ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்கத்தக்க சிறைத் தண்டனைக்கு உரியதாகும்; மேலும், ரூ.1 லட்சத்திற்குக் குறையாத ஆனால், ரூ.5 லட்சம் வரை நீட்டிக்கத்தக்க அபராதத்திற்கும் உரியதாகும் அல்லது சிறைத் தண்டனை, அபராதம் இரண்டுக்கும் உரியதாகும்.

- மீண்டும் குற்றம் செய்ததாக நிரூபிக்கப்படுகிற எவரொருவரும் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாத ஆனால், ஏழு ஆண்டுகள் வரை நீட்டிக்கத்தக்க சிறைத் தண்டனைக்கு உரியதாகும்; மேலும், ரூ.2 லட்சத்திற்குக் குறையாத ஆனால், ரூ.5 லட்சம் வரை நீட்டிக்கத்தக்க அபராதத்திற்கும் உரியதாகும் அல்லது சிறைத் தண்டனை, அபராதம் இரண்டுக்கும் உரியதாகும்.

- இந்தச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்படும் எந்த ஒரு அரசு அதிகாரியும், இந்தச் சட்டத்தின்கீழ், தான் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை புறக்கணிப்பாரானால், அந்த ஆண்/பெண், ஓராண்டுக்குக் குறையாத ஆனால், இரண்டு ஆண்டுகள்வரை நீட்டிக்கத்தக்க சிறைத் தண்டனைக்கு உரியவராவார்.

## 9. குழந்தைத் தொழிலாளர் தடுப்பு மாற்றுச் சட்ட முன்வரைவு நடைமுறைக்கு வரும்போது வேலையில் உள்ள குழந்தையின் உரிமைகள்

- குழந்தைகளின் உரிமை தொடர்பான இந்தச் சட்டத்தின் வெவ்வேறு பகுதிகள், வெவ்வேறு தேதிகளில் அறிவிக்கப்பட வேண்டிய தேவை இருக்கும்; ஏனெனில், இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும்போது குறைந்தது நான்கு வகையான நிலைமைகளுக்கு தீர்வுகாண வேண்டியிருக்கும்.

- குழந்தைகளின் வகைப்பாடுகள்
  - ➢ வேலையில் உள்ள ஆனால், பள்ளியிலிருந்து ஒரு குறுகிய காலத்திற்கு இடை நிற்றல் ஆகியுள்ள குழந்தைகள்.
  - ➢ நீண்ட காலத்திற்கு பள்ளியிலிருந்து நின்றுள்ள குழந்தைகள் (மூன்று ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் குழந்தைகள் இடைநிற்றல் ஆகியிருந்தால், வீடு சார்ந்த இணைப்புப் பயிற்சி வழங்கப்பட வேண்டும்.)
  - ➢ 18 வயதிற்குக் குறைந்த, எந்த ஒரு பள்ளியிலும் அல்லது வேறு எந்த ஒரு கற்றல் திட்டத்திலும் சேர்க்கப்படாத குழந்தைகள்.
  - ➢ பள்ளிக்குச் செல்கிற ஆனால், விடுமுறை நாட்களிலும் நீண்ட விடுமுறைகளிலும் வேலை செய்கிற குழந்தைகள். (பள்ளி நேரத்திற்கு முன்பும் பின்பும், விடுமுறை நாட்களிலும் குழந்தைகளை வேலையில் நியமிப்பது தடை செய்யப்படுகிறது.)
  - ➢ குழந்தைத் தொழிலாளர்களாக கொண்டுவரப்பட்ட புலம்பெயர்ந்த குழந்தைகள் அல்லது இங்கு தங்களது குடும்பங்களோடு வாழ்கிற ஆனால் வேலை செய்கிற புலம்பெயர்ந்த குழந்தைகள்.
  - ➢ மூன்று ஆண்டுகளுக்கு மேல் பள்ளியிலிருந்து இடைநிற்றல் ஆகியுள்ள குழந்தைகளுக்கு விடுதியுடன் கூடிய இணைப்புப் பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

## 10. சட்டம் அறிவிக்கப்பட்ட பிறகு, அரசாங்கத்தாலும் வேலை அளிப்பவராலும் சட்டவிதிகள் மீறப்படும்போது குழந்தைகளின் உரிமைகள் மற்றும் தீர்வுகள்

- ➢ இந்தச் சட்டமுன்வரைவில் பயனுள்ள நிவாரணங்களை வகுக்கிறபோது, **இந்திய அரசு, சர்வதேச மனித உரிமைகள் சட்டம் கடுமையாக மீறப்படுவதாலும் சர்வதேச மனிதாபிமான மற்றும் குற்றவியல் சட்டம் கடுமையாக மீறப்படுவதாலும் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு ஒரு நிவாரணம் மற்றும் இழப்பீடு பெறுவதில் உள்ள உரிமை** தொடர்பாக ஐ.நா. அடிப்படைக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

- ➢ **எந்த ஒரு வடிவிலும் பயனுள்ள நிவாரணம் கிடைப்பதற்கு குற்றப் பொறுப்பு ஒரு முன் தேவையாகும்.** ஒரு பயனுள்ள நிவாரணத்திற்கான உரிமை சர்வதேச சட்டத்தின் ஒரு உள்ளார்ந்த கண்ணோட்டமாகும். இதில், நிவாரணத்திற்கான உரிமையை உறுதிப்படுத்தும் அனைத்து உடன்பாட்டு விதிகளையும் நினைவில்கொள்ள வேண்டும்: UDHR– சரத்து 8, ICCPR - சரத்து 2, ICERD - சரத்து 6, CAT - சரத்து 14, CRC - சரத்து 39. இந்த உடன்பாட்டு விதிகள் ஹேக் மற்றும் ஜெனிவா மாநாட்டு உடன்பாடுகளிலும் உள்ளன. அத்துடன் வட்டார அளவில் நடந்த மாநாடுகளின் தீர்மானங்களிலும் உள்ளன. அவை வருமாறு: ஆப்பிரிக்க சாசனம் – சரத்து 7, அமெரிக்க மாநாடு – சரத்து 25, ஐரோப்பிய மாநாடு – சரத்து 13. அந்த ஐ.நா. அடிப்படைக்

கொள்கைகளும் வழிகாட்டல்களும் 2005 டிசம்பர் 16 அன்று வாக்கெடுப்பு இல்லாமல் ஐ.நா. பொதுக் குழுவில் ஏற்கப்பட்டன.

➢ **இந்திய அரசு அவற்றை ஏற்றுக்கொண்டது.** அடிப்படைக் கொள்கைகளின் பிரிவு 9ன் கீழ், குழந்தைகள் அனுபவித்த தீங்குகளுக்கான இழப்பீடு தொடர்பான, தெளிவான வழிகாட்டல்களுடன் கூடிய, தொடர்ச்சியான சரத்துகள் உள்ளன. மீட்பு, இழப்பீடு, மறுவாழ்வு, மனநிறைவு மற்றும் மீண்டும் முன்போல் நடக்காது என்பதற்கான உத்தரவாதங்கள்.

➢ ஒரு முக்கியமான அம்சம், குறிப்பிட்ட தீங்கு செய்யப்படாமல் இருந்திருந்தால் குழந்தை அநேகமாக எந்த நிலையில் இருந்திருக்குமோ அந்த மூல நிலைக்கு குழந்தை மீட்கப்படுவதாக இருக்க வேண்டும். குற்றத்தின் கடுமைக்குத் தக்கவாறு அதற்கேற்ற விகிதத்தில் அது இருக்க வேண்டும். அதில், பணம் சார்ந்த, பணம் சாராத நடவடிக்கைகள் இரண்டுமே இருக்க வேண்டும்.

பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் 2013 ஏப்ரல் 9 அன்று பிறப்பித்த ஆணை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஹேமந்த் கோஸ்வாமி தாக்கல் செய்த ஒரு ஆணை கோரும் மனுவின் மீது நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கியது. இதர அம்சங்களோடு நீதிமன்றம் பின்வரும் அம்சங்களைக் கொண்ட மறுவாழ்வு திட்டங்களை உள்ளடக்கிய தீர்ப்பை அளித்துள்ளது:

a) (i) சுரண்டல் சூழலில் இருந்து குழந்தையை அப்புறப்படுத்துதல்

(ii) கல்வியை உறுதிப்படுத்துதல்

(iii) உணவு / சாப்பாடு / உடைகள் / இதர அத்தியாவசியத் தேவைகளை உறுதிப்படுத்துதல்.

(iv) அபராதம் / இழப்பீடு ஆகியவை குழந்தைக்குப் பலனளிப்பதாக இருக்க வேண்டும்.

(v) தொடர்ச்சியான கண்காணிப்பு.

b) 1986ம் ஆண்டின் இந்திய குழந்தை தொழிலாளர் சட்டத்தில் உள்ள பல விதிகள் சட்ட விரோதமானவை என்றும் இந்திய அரசமைப்பு சாசனத்திற்கு எதிரானவை என்றும் நீதிமன்றம் அறிவித்தது.

(vi) பொருளாதார ரீதியாக மதிப்பிடக்கூடிய எந்த ஒரு சேதத்திற்கும் இழப்பீடு வழங்கப்பட வேண்டும். அது பொருத்தமானதாகவும் சட்டமீறலின் கடுமைத்தன்மைக்கு ஏற்ற விகிதத்திலும் இருக்க வேண்டும். பின்வரும் மனித உரிமை மீறல்களால் ஏற்படும் ஒவ்வொரு சூழலுக்கும் பொருத்தமானதாக இருக்க வேண்டும்:

a) உடல் சார்ந்த அல்லது மனம் சார்ந்த தீங்கு

b) இழக்கப்பட்ட வாய்ப்புகள் – கல்வி உள்பட

c) பொருள் சார்ந்த சேதங்கள்

d) தார்மீக சேதம்

e) சட்ட உதவி, மருத்துவ சேவைகள் மற்றும் இது தொடர்பான இதர தேவைகளுக்கான செலவுகள். மன நிறைவு என்பது குழந்தை உழைப்பு நிறுத்தப்படுவதை உள்ளடக்கியதாகும்.

- இழப்பீட்டு உரிமை என்பது நியாயமான விசாரணைக்கான (குழந்தைகள் நீதிமன்றங்கள்) ஒரு பயனுள்ள வாய்ப்புக்கான நடைமுறை சார்ந்த உரிமை, இழப்பீட்டிற்கான மீட்பு, இழப்பீடு, மறுவாழ்வு, மனநிறைவு, மீண்டும் நிகழாமல் இருப்பதற்கான உத்தரவாதம் ஆகிய அங்கீகரிக்கப்பட்ட வடிவங்களில் ஒன்றை பெறுவதற்கான உறுதியான உரிமை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

- சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) மற்றும் 138, 182வது உடன்படிக்கைகளை இந்திய அரசு உடனடியாக அங்கீகரிக்க வேண்டும். அது 18 வயதுவரையில் குழந்தை உழைப்பைத் தடை செய்வதாக இருக்க வேண்டும்.

## 11. குழந்தைகளின் உரிமைகள்

▪ 18 வயதிற்குக் குறைந்த குழந்தைகள் அனைத்து வடிவங்களிலுமான, அனைத்து வேலை

இடங்களிலும் பணியில் அமர்த்தப்படாமல் இருக்கும் உரிமை.

- பாலியல் அத்துமீறல், சித்ரவதை, துன்புறுத்தல், உடல் சார்ந்த/மனம் சார்ந்த/உளவியல் சார்ந்தவை உள்ளிட்ட வணிக ரீதியான பாலியல் சுரண்டலில் இருந்து மீட்பு.
- வேலைக்காக கடத்தப்படும் குழந்தைகளின் உரிமைகள்
- பொருளாதாரச் சுரண்டலில் இருந்தும் எந்த வகையான வேலையைச் செய்ய வேண்டிய நிலையில் இருந்தும், அல்லது குழந்தையின் கல்வியில் குறுக்கிடுவதிலிருந்தும், அல்லது குழந்தையின் ஆரோக்கியம் அல்லது உடல் சார்ந்த, மனம் சார்ந்த, ஆன்மா சார்ந்த, தார்மீகரீதியான, சமூகரீதியான வளர்ச்சிக்குக் குந்தகமாக இருப்பதிலிருந்தும் பாதுகாப்பு அளிக்கப்படும் உரிமை.
- 18 வயது வரையில் அல்லது 12ம் வகுப்பு முடிக்கும் வரையில் இலவச, கட்டாய, தரமான மற்றும் சமமான கல்வி உரிமை மற்றும் குழந்தைப் பருவ பராமரிப்பு மேம்பாட்டு உரிமை.
- பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிலிருந்து மீட்கப்படும்போது இருக்கும் குழந்தைகளின் உரிமைகள்.
- மீட்கப்படும் ஒவ்வொரு குழந்தைக்கும் குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நல நிதி கணக்கில் நிதி பெற்றிருக்கும் உரிமை.
- அனைத்துவிதமான பாலியல் குற்றங்களிலிருந்தும் குழந்தைகளைப் பாதுகாக்க உரிமை.
- இழக்கப்படும் கௌரவம், குழந்தைப் பருவம் மற்றும் கல்வி மீட்பு.
- நிவாரணம் மற்றும் மறுவாழ்வு உரிமை
- இழப்பீட்டு உரிமை
- (தவறான நடவடிக்கைகளுக்காக) இழப்பீட்டு உரிமை
- வேலை அளிப்பவர், வேலைத் தலத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் உள்ளிட்டோர் மற்றும் அரசு அதிகாரி மீது தண்டனை நடவடிக்கைகள் எடுக்கச் செய்வதற்கான குழந்தைகளின் உரிமை.

**12. வீடு சார்ந்த பணிகளிலும் குடும்பத்தால் நடத்தப்படும் தொழில்களிலும் வேலை செய்யும் குழந்தைகள் வேலையில் நியமிக்கப்படுவதற்குத் தடை விதிக்கப்படுகிறது.**

**13. வயது தொடர்பான சர்ச்சை**

- பள்ளி மாற்றுச் சான்றிதழ் அல்லது அதற்கு இணையான சான்றிதழ், அது இல்லாதபோது பள்ளியிலிருந்து வயதுச் சான்றிதழ் (பள்ளிச் சேர்க்கைப் பதிவேட்டிலிருந்து எடுக்கப்பட்டது.)
- முதலில் சென்ற பள்ளியிலிருந்து (விளையாட்டுப் பள்ளி அல்லாமல்) பெறப்பட்ட பிறந்த தேதி சான்றிதழ்; அது இல்லாத நிலையில்,
- மாநகராட்சியால் அல்லது நகராட்சியால் அல்லது ஊராட்சியால் வழங்கப்படும் பிறந்த தேதி சான்றிதழ்.

**14. குழந்தைத் தொழிலாளர் நியமனத்திற்கு தடை விதிக்கப்பட்டிருப்பது தொடர்பான அறிவிப்பை வெளிப்படையாக வைத்தல்**

**15. குற்றச் செயல்கள் தொடர்பான நடைமுறைகள்**

- இந்தச் சட்டத்தின் கீழ் வரும் ஒரு குற்றச் செயல் தொடர்பாக உரிய அதிகார வரம்புள்ள எந்த ஒரு நீதிமன்றத்திலும், எந்த நபரும் குழந்தைத் தொழிலாளர் தடுப்பு அலுவலர் அல்லது தொழிலாளர் ஆய்வாளரும் புகார் பதிவு செய்யலாம்.
- இந்தச் சட்டத்தின் கீழ் வரும் எந்த ஒரு குற்றச் செயல் குறித்தும் பெருநகர குற்றவியல் நடுவர் அல்லது முதல்நிலை குற்றவியல் நடுவருக்கு கீழ் நிலையில் உள்ள எந்த ஒரு நீதிமன்றத்தாலும் விசாரிக்கப்படமாட்டாது. வழக்குகளை விரைவில் முடிப்பதற்காக இந்தச் சட்டத்தின் கீழ் விதி மீறல் குறித்த வழக்குகளை குற்றவியல் நடுவர் உடனடியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்வார்.
- ஒரு நிறுவனத்தில் ஒரு குழந்தை கொத்தடிமை நிலையில் வேலை செய்யுமானால் அல்லது வேறு வகையில் வேலை செய்யும் நிலையில் குற்றம் நடைபெறவில்லை என நிரூபிப்பது வேலையளிப்பவரின் பொறுப்பாகும்.
- இந்தச் சட்டத்தின் கீழ் ஏதேனும் அபராதம்

விதிக்கக்கூடிய ஒரு நீதிமன்றம், அந்த நீதிமன்றத்தால் ஆணையிடப்படுகிற நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்காக, அபராதத் தொகையை மொத்தமாக அதன் பகுதியை குழந்தைத் தொழிலாளர் மறு வாழ்வு மற்றும் நல நிதிக்கு செலுத்துமாறு அல்லது அதில் சேர்க்குமாறு ஆணையிடலாம்.

**16. குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நல நிதி/கணக்கு**

- இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதிலிருந்து, இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக, மத்திய அரசு / மாநில அரசு ஒரு நிதி அமைப்பை ஏற்படுத்த வேண்டும். அது "குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு, இழப்பீடு மற்றும் சேத இழப்பீட்டு நிதி" என்று குறிப்பிடப்படும்.

- **இந்த நிதி பயன்படுத்தப்படுவதை கண்காணிக்க சமூக அமைப்பு மற்றும் அரசாங்கம் பங்கேற்கும் ஒரு குழு அமைக்கப்பட வேண்டும்.**

- குழந்தைத் தொழிலாளியின் கணக்கில் உள்ள சேமிப்பு நிதியிலிருந்து வரும் தொகைகள் இந்தக் குழுவால், அந்தக் குழந்தையின் கல்வி, மறுவாழ்வு, இழப்பீடு, ஆரோக்கிய, குழந்தைப் பருவ மீட்பு ஆகியவற்றுக்காக அர்த்தமுள்ள வழியில் அல்லது பாகம் VIல் வரையறுக்கப்பட்டுள்ள எந்த ஒரு நோக்கத்திற்காகவும், இந்தச் சட்டத்தின் கீழ் பணியிலிருந்து அப்புறப்படுத்தப்படும் / மீட்கப்படும் குழந்தையின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும்.

- கிராம ஊராட்சி செயலர் அல்லது மாநில அரசால் அறிவிக்கப்படுகிற/நியமிக்கப்படுகிற பொறுப்புள்ள வேறு உள்ளூர் அளவிலான அதிகாரி, குழந்தைத் தொழிலாளி கணக்கின் பொறுப்பாளராக இருக்க வேண்டும்; அந்த கணக்கிலிருந்து தொகைகள் குழந்தையின் கல்வி, ஆரோக்கிய பராமரிப்பு, தொழில்சார் பயிற்சிக்கு அர்த்தமுள்ள வகையில் பயன்படுத்தப்படுவதை அவர் உறுதிப்படுத்த வேண்டும்.

- சட்டத்தின் பிரிவு 16 துணைப்பிரிவு 4ன் கீழ் வரையறுக்கப்படும் வட்டார, மாவட்ட அளவிலான குழுக்கள், சட்டத்தை மீறுவோரிடமிருந்து தொகை வசூலிக்கப்படுவதற்கும் அரசாங்கத்திடமிருந்து வைப்புநிதி கிடைக்கப் பெறுவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்; சம்பந்தப்பட்ட குழந்தையின் நலனுக்காக அந்த நிதி முறையாகப் பயன்படுத்தப்படுவதை கண்காணிக்க வேண்டும்.

## குழந்தைகளுக்குப் பாலியல் தொல்லை கொடுத்த தலைமையாசிரியர் குண்டர் சட்டத்தில் கைது

22 மே 2015 சிவகங்கை அருகே, பள்ளி குழந்தைகளுக்குப் பாலியல் தொல்லை கொடுத்த தலைமையாசிரியர் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டார். சிவகங்கை மாவட்டம், காளையார்கோவிலை அடுத்த பெரிய நரிக்கோட்டையில் உள்ளது ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி. இந்தப் பள்ளியின் தலைமையாசிரியராக பணிபுரிந்தவர் முருகன் (45). இந்தப் பள்ளியில் படித்த 6 பெண் குழந்தைகளுக்கு தொடர்ந்து பாலியல் தொல்லை கொடுத்ததாக, தலைமையாசிரியர் முருகன் மீது, தொடர்ந்து புகார்கள் எழுந்த வண்ணம் இருந்தது. அதன் பேரில் அவரைக் காவல்துறையினர் கைது செய்தனர். ஆனால், தலைமையாசிரியர் முருகனை கைது செய்தது மட்டும் போதாது, அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பள்ளிக் குழந்தைகளின் பெற்றோர்களும், சமூக ஆர்வலர்களும் அரசுக்கு கோரிக்கை விடுத்து, போராட்டம் நடத்தினர்.

இந்நிலையில், தலைமையாசிரியர் முருகனை குண்டர் சட்டத்தில் கைது செய்ய, மாவட்ட ஆட்சித் தலைவர் முனுசாமிக்கு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் துரை பரிந்துரை செய்தார். இதனையடுத்து, தலைமையாசிரியர் முருகனை குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்க, மாவட்ட ஆட்சித் தலைவர் முனுசாமி உத்தரவிட்டதையடுத்து, அவர் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டார்.

**ஆதாரம்: வெப்துனியா, 20 ஜூன், 2015**

# நாடாளுமன்றத்தில் சிறார் அநீதி மசோதா!

– கனிமொழி
கட்டுரையாளர், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்

*சிறார்நீதி சட்ட முன்வரைவில் செய்யப்பட்டுள்ள திருத்தங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பது அரசமைப்பு சாசனத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை மீறுவதோடு, ஆதாரங்களின் அடிப்படையிலான சமுதாயக் கொள்கையுடனும் முரண்படுகின்றன.*

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு உலக ஐக்கிய நாடுகளின் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கையில் இந்திய நாடு கையெழுத்திட்டு, உலகத்திலுள்ள அத்தனை குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்கவும், மேம்படுத்தவும் உலக நாடுகளோடு சேர்ந்து உறுதி எடுத்துக்கொண்டது. ஆனால், இன்று சிறார் நீதி சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வருவதன் மூலம் அன்று இந்தியா வரித்துக் கொண்ட உறுதிமொழியில் இருந்து பின்னோக்கிச் செல்வதோடு, தீவிரமான ஆபத்தை நோக்கியும் நகர்ந்து கொண்டிருக்கிறது.

2014ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இந்த அரசு இளஞ் சிறார் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு மசோதாவை மக்களவையில் அறிமுகப்படுத்தியது. 16 முதல் 18 வயது வரையிலான சிறார் குற்றவாளிகளை மற்ற குற்றவாளிகளைப் போன்றே விசாரணை செய்ய இந்த மசோதா அனுமதிக்கிறது. இது அறிந்தே நீதியை கைவிடும் ஓர் அபாயமான நிகழ்வு. மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்ட இந்த மசோதா நாடாளுமன்ற நிலைக்குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது.

நாடாளுமன்ற நிலைக்குழு இந்த மசோதாவை விரிவாக ஆராய்ந்து கடந்த பிப்ரவரி மாதம் தனது கடுமையான எதிர்ப்பினை அரசிடம் தெரிவித்தது. ஆனபோதும், தற்போதைய மத்திய அமைச்சரவை இந்த மசோதாவை இதே திசையில் எடுத்துச் செல்வது என முடிவு எடுத்திருப்பதாக ஊடகங்களில் செய்தி வந்திருக்கிறது.

மத்திய அமைச்சரவை அவ்வாறு முடிவு செய்திருப்பது உண்மையானால், இது சர்வதேச சிறார் குற்றவாளிகள் குற்ற நடைமுறையையும், நமது அரசியல் சாசனத்தையும் உடைத்தெறிகிற நடவடிக்கையாகவே இதை நான் பார்க்கிறேன். மேலும் முக்கியமாக... மத்திய அரசின் இந்த நடவடிக்கை மிகவும் பிற்போக்குத்தனமான நடவடிக்கை மட்டுமல்ல... முறை தவறிய சமூகக்கொள்கையாகவும் இதை பார்க்கிறேன்.

### உடைபடும் தவறான கருத்துகள்

மத்திய அரசு கொண்டுவந்துள்ள திருத்த மசோதாவில், பல சிறார் குற்றவாளிகள் கடுமையான வன்முறைகளையும், பாலியல் பலாத்காரங்களையும் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையான புள்ளிவிவரங்களை நாம் பார்த்தோமானால் அது வேறு மாதிரியாக இருக்கிறது. அரசின் புள்ளி விவரங்களின்படி 2003ஆம் ஆண்டு 16 முதல் 18 வயது வரையிலான சிறார்கள் மீது 1,388 பாலியல் பலாத்கார வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த எண்ணிக்கை, குறிப்பிட்ட அந்த ஆண்டில் பதிவான பாலியல் பலாத்கார வழக்குகளின் எண்ணிக்கையில் ஐந்து சதவிகிதத்துக்கும் குறைவு. மேலும், நாடாளுமன்ற நிலைக்குழு இந்த விவகாரத்தை ஆய்வு செய்தபோது, 16 முதல் 18 வயது வரையிலான பருவத்தில் இசைவோடு நடந்த பாலியல் நடவடிக்கைகளையும் பாலியல் பலாத்கார வழக்குகளாக சேர்க்கப்பட்டிருப்பது தெரிய வந்திருக்கிறது. இதன் மூலம் அதிக எண்ணிக்கையிலான சிறார்கள் பாலியல் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக ஓர் தவறான பிம்பம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மத்திய அரசின் இந்த சட்டத் திருத்த மசோதாவை ஆதரிக்கும் சிலர், சிறார் குற்றங்களின் தீவிரத்தைப் பார்க்கையில் அவர்களது மன முதிர்ச்சி பிரதிபலிக்கப்படுவதாக கூறியிருக்கிறார்கள். ஆனால், இந்த துரதிர்ஷ்டவசமான கருத்துகள் அனைத்து உளவியல் ஆய்வுகளின் மூலமும் தவறானவை என நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. வளர் பதின் பருவம் என்பது உளவியல் ரீதியான, ஹார்மோன்கள் ரீதியான,

உணர்வுகள்ரீதியான மூளையில் கட்டமைப்பு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய பருவம் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நரம்பியல் ஆய்வாளர்களின் ஆய்வில், திட்டமிடுதல், முடிவெடுத்தல், காரணங்களை ஆய்தல், கட்டுப்படுத்துதல் போன்ற மிக முக்கியமான மனிதனின் செயல்பாடுகளுக்குக் காரணமான மனித மூளையின் முன் பக்க மடல் 25 வயதில்தான் முழு வளர்ச்சி அடைகிறது என்று கண்டறிந்துள்ளனர். இது அறிவியல்ரீதியாக நிரூபிக்கப்பட்ட நிலையில் 16 முதல் 18 வயதுடைய சிறார்கள் மன முதிர்ச்சியோடுதான் குற்றச் செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்வது அறிவியல் ரீதியாக மிகத் தவறானது.

மேலும், அரசின் விவரங்களை நாம் உற்று நோக்கும்போது 80 சதவிகித சிறார் குற்றவாளிகள் ஐம்பதாயிரம் ரூபாய்க்கும் குறைவான ஆண்டு வருமானம் ஈட்டும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது புலனாகிறது. மேலும் சிறார் குற்றவாளிகளில் ஐம்பது சதவிகிதத்துக்கும் மேற்பட்டவர்கள் ஆரம்பப் பள்ளிப் படிப்பைக்கூட முடிக்காதவர்கள் என்றும் தெரிய வருகிறது. ஆக, நாம் இந்த சமுதாயம் நமது குழந்தைகளுக்கு முறையான ஆரோக்கியமான சூழலில் வளரும் நிலையை உருவாக்கத் தவறியிருக்கிறோம் என்பதே உண்மை. தவறை சமூகம் முழுமையும் வைத்துக் கொண்டு எப்படி அவர்களை நாம் சட்ட முறையை உருவாக்கித் தண்டிக்க முடியும் ?

நமது சிறார் நீதி முறையின் செயல்பாடுகள் பற்றிய ஓர் உதாரணம் ஒன்று சொல்கிறேன். பதினாறு வயதான ஒரு சிறுமி தான் குழந்தையாக இருந்தபோதே தாயை இழந்துவிட்டாள். அவள் அதன் பின் உடல் ரீதியாகவும், பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தலுக்கு ஆளாகியிருக்கிறாள். ஆனால் அவள் விபசாரம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு கூர்நோக்கு இல்லத்திற்கு அனுப்பப்பட்டாள். விடுதியில் இருந்த காலத்தில் அவள் அடிக்கடி தற்கொலை செய்ய முயன்றிருக்கிறாள். ஆனால் அரசினர் சிறார் நல மையத்தின் சார்பில் அவளுக்கு கொடுக்கப்பட்ட ஆலோசனைகள், அக்கறை ஆகியவற்றின் காரணமாக அந்த பெண்ணின் வாழ்வில் புதிய நம்பிக்கை துளிர் விட்டது. இப்போது அவளுக்கு இருபது வயதாகிறது. இன்று அவள் ஓர் துணிக்கடையில் விற்பனைப் பெண்ணாக பணி புரிகிறாள். தையல், எம்பிராய்டரி போன்ற தொழில்களை கற்றுக்கொண்டு இன்று தான் தங்கியிருக்கும் இடத்தில் உள்ள குழந்தைகளை அக்கறையாக பார்த்துக்கொள்கிறாள். தேசிய சட்டப்பள்ளிகளின் உண்மையான அக்கறையான பணிகளுக்கு இது ஓர் உதாரணம்.

அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் சிறார் குற்றவாளிகளையும் சட்ட விசாரணைக்கு உட்படுத்தும் முறையை ஏற்கனவே அறிமுகப்படுத்தினார்கள். ஆனால் இதன் மூலம் சிறார் குற்றச்செயல்விகிதங்களை குறைப்பதில் தோல்வியையே கண்டார்கள். அமெரிக்காவின் சிறார் குற்ற நீதிமுறை சீர்திருத்தத்துக்கான தேசிய பிரச்சார இயக்கத்தின் கருத்துப்படி, சிறார் சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்ட சிறார் குற்றவாளிகளில் 80 சதவிகிதம் பேர் மேலும் தீவிரமான குற்றச்செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இதன்மூலம் நமக்கு ஓர் செய்தி தெளிவாக உணர்த்தப்பட்டிருக்கிறது. குற்றங்களில் ஈடுபட்ட சிறார்களை விடுதிகளில் சேர்த்து அறநெறி ஆலோசனைகளை அவர்களுக்கு அளித்து அவர்களை இந்த சமுதாயத்தில் மீண்டும் மனிதராக சேர்க்க விரும்புகிறோமா, அல்லது சிறார் குற்றவாளிகளை கிரிமினல் சட்ட முறைகளுக்கு உட்படுத்தி அவர்களை சிறையில் அடைத்து மேலும் கொடிய குற்றங்களை செய்யக்கூடிய கிரிமினல்களாக அவர்களை மாற்றப்போகிறோமா ?

## குழந்தை உரிமைகள் பாதுகாப்பது

ஊடகச்செய்திகளின்படி சிறார் குற்றவாளிகள் விஷயத்தில் நாடாளுமன்ற நிலைக்குழுவின் பரிந்துரைகளை கண்டு கொள்ளாமல் மத்திய அமைச்சரவை தன் வழியில் செல்வதாகவே தெரிகிறது. இந்த மசோதா இன்னும் சில வாரங்களில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படலாம். இந்த விவகாரத்தில் சரியான உண்மைகளை பதிவு செய்யவேண்டியது நம் கடமை. கடந்த ஒரு மாத காலமாக பல்வேறு பெண்ணுரிமை அமைப்புகள், வழக்கறிஞர்கள், குழந்தைகள் உரிமை நல அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், பல சிறுவர் சீர்திருத்த இல்ல நிர்வாகிகள் ஆகிய பலரிடமும் நான் பெற்ற விவரங்களின்படி அவர்கள் அனைவரும் சொல்லும் ஒருமித்த கருத்து

**இதன் தொடர்ச்சி பக்கம் 30ல்...**

**தமிழ்நாட்டில் தீப்பெட்டி தொழிற்சாலை, பட்டாசுத் தொழில், பட்டு சேலை நெசவு மற்றும் பீடி தயாரிக்கும் தொழிற்சாலைகளில் குழந்தைகள் தொழிலாளர்களாக உள்ளனர்.**














## பல்வேறு வேலைகளில் ஈடுபடுத்தப்படும் குழந்தைத் தொழிலாளர்கள்








## குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் – மாநிலம் / யூனியன் பிரதேசம் 2013 / 2012 காலகட்டத்தில்




2013ல் அகில இந்திய அளவில் குற்றச்செயல் சதவீதம்

2012ல் அகில இந்திய அளவில் குற்றச்செயல் சதவீதம்

2013ல் அகில இந்திய அளவில் குழந்தைகளின் மக்கள் தொகை சதவீதம்





குழந்தைகள் தங்கியிருந்த
விடுதியின் சூழல்

குழந்தைகள் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்ட மேல்தளப் பகுதி



மேல்தளத்திற்கு செல்லும் வழி



குற்றவாளிகளால் பயன்படுத்தப்பட்ட
விடுதிக்கு அருகிலுள்ள உடைந்த கட்டிடங்கள்



காவலர்களற்ற T.E.L.C. குழந்தைகள் விடுதியின் நுழைவாயில்



# மகளிர் நீதிமன்றம், கோயமுத்தூர்
# முன்னிலை - திரு.எம்.பி. சுப்ரமணியன், பி.ஏ.பி.எல், அமர்வு நீதிபதி, மகளிர் நீதிமன்றம், கோயமுத்தூர்

*2014ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 24ம் நாள் புதன் கிழமை*
*ஸ்ரீ ஜய வருடம் மார்கழித் திங்கள் 9ம் நாள்*
*சிறப்பு ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.34/2014*
(பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண் 16/2014)

| | | | |
|---|---|---|---|
| 1. | குற்ற முறையிடுபவர் | : | காவல் துணைக் கண்காணிப்பாளர் மாவட்ட குற்றப் புலனாய்வுத் துறை அனைத்து மகளிர் காவல் நிலையம் பொள்ளாச்சி கோயமுத்தூர். |
| 2. | எதிரியின் பெயர் | : | குரு என்கிற வீரா என்கிற வீராச்சாமி (23)<br>த/பெ வேலுசாமி, கக்கன் காலனி, நாச்சிமுத்து கிரவுண்டு அருகில், வால்பாறை, கோவை மாவட்டம் |
| 3. | குற்றச்சாட்டு | : | இதச 450, 366 ஏ, 376, 506(ii) மற்றும் 2012 ஆம் வருடத்திய குழந்தைகள் பாலியல் பலாத்கார தடுப்புச் சட்டம் பிரிவுகள் 5(i), 5(1), 5(m) r/w 6 |
| 4. | எதிரியின் பதில் | : | எதிரி இதச 450, 366 ஏ, 376, 506(ii) மற்றும் 2012 ஆம் வருடத்திய குழந்தைகள் பாலியல் பலாத்கார தடுப்புச் சட்டம் பிரிவுகள் 5(i), 5(1), 5(m) r/w 6 குற்றவாளி இல்லை |
| 5. | நீதிபதியின் முடிவு | : | எதிரி இதச 450, 366 (2 எண்ணிக்கை), 376 உடன் இணைந்த 2012 ஆம் வருடத்திய குழந்தைகள் பாலியல் பலாத்கார தடுப்புச் சட்டம் பிரிவுகள் 5(i) (2 எண்ணிக்கை), 5(1), 5(m) r/w 6 குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டது. |
| 6. | தீர்ப்பு | : | |

| | | |
|---|---|---|
| இதச 450வது பிரிவின்கீழான குற்றத்திற்காக | : | **10 (பத்து)** வருடக் கடுங்காவல் சிறைத் தண்டனையும் மற்றும் **ரூ.1000/–** (ஆயிரம் மட்டும்) அபராதம் விதித்தும் கட்டத் தவறினால் **3 மாத** மெய்க் காவல் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. |
| இதச 366 (2 எண்ணிக்கை) பிரிவின் கீழான குற்றத்திற்காக | : | ஒவ்வொரு எண்ணிக்கைக்கும் தலா 10 (பத்து) ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் மற்றும் ரூ.1000/– (ஆயிரம் மட்டும்) அபராதம் விதித்தும் கட்டத் தவறினால் ஒவ்வொரு எண்ணிக்கைக்கும் தலா 3 மாத மெய்க்காவல் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. |
| இதச 376 உடன் இணைந்த குழந்தைகள் பாலியல் பலாத்கார பாதுகாப்புச் சட்டம் பிரிவுகள் 5(1) (2 எண்ணிக்கை) மற்றும் 5(1) மற்றும் 5(m) r/w 6இன் கீழான குற்றத்திற்காக | : | இரட்டை ஆயுள் தண்டனை விதித்தும் மற்றும் ரூ.1000/– (ஆயிரம் மட்டும்) அபராதம் விதித்தும் உத்தரவிடப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| இதச 506(ii) (2 எண்ணிக்கை)வது பிரிவின் கீழான குற்றத்திற்காக | : | **தலா 7 (ஏழு)** ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் மற்றும் **ரூ.1000/– (ஆயிரம் மட்டும்)** அபராதம் விதித்தும் கட்டத் தவறினால் 3 மாத மெய்க்காவல் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. |

மொத்த அபராதத் தொகை ரூ.7000/–

எதிரி இத்தண்டனைகளை ஏக காலத்தில் சேர்த்து அனுபவிக்க வேண்டும் என்றும் ஏற்கெனவே இவ்வழக்கு குறித்து காவலில் இருந்த நாட்களை குவிமுச 428 பிரிவின்கீழ் தண்டனைக் காலத்தில் கழித்துக் கொள்ள வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கானது 11.12.2014 அன்று என் முன் இறுதி விசாரணைக்காக வந்ததில் அரசு தரப்பில் திருமதி.ஆர். சரோஜினி, கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.மயில்வாகனன் அவர்கள் ஆஜராகியும் நடத்திய இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்த வழக்கில் இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்.

## தீர்ப்புரை

1. இவ்வழக்கின் எதிரியானவர் 11.6.2014/12.6.2014 தேதியன்று பொள்ளாச்சி பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள TELC சர்ச் வளாகத்தில் உள்ள விடுதியில் தங்கிப் படிக்கும் பெண் சிறுமிகளை பாலியல் பலாத்காரம் செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மேற்படி விடுதியினுள் அத்துமீறிப் பிரவேசம் செய்து விடுதியினுள் உறங்கிக் கொண்டிருந்த 10 வயதான சிறுமி திலகவதி, 8 வயதான சிறுமி மகாலட்சுமி ஆகியோர்களை பலாத்காரம் செய்ய வேண்டும் என்ற உள்நோக்கத்தில் அங்கிருந்த எவர்சில்வர் கரண்டியை காட்டிக் கட்டாயப்படுத்தி மிரட்டி மேற்படி இரு குழந்தைகளையும் விடுதியில் இருந்து மேற்படி சர்ச் வளாகத்தினுள் உள்ள சர்வோதயா சங்க கட்டிடத்தின் மாடிக்கு வலுக்கட்டாயமாக கடத்திச் சென்று 12 வயதுக்கு உட்பட்ட மேற்படி சிறுமிகளை அவர்களது விருப்பத்திற்கு மாறாக அவர்களை கட்டாயப்படுத்தி வலுக்கட்டாயமாக சிறுமி திலகவதியிடம் தொடர்ந்து பல முறையும் சிறுமி மகாலட்சுமியிடம் ஒரு முறையும் வன்புணர்ச்சி செய்து அவர்களது பாலுறுப்புகளில் காயங்கள் ஏற்படுத்தி பாதிக்கப்பட்ட மேற்படி சிறுமிகள் சத்தம் போட்டு கத்தியவர்களை பிளேடால் உங்க கழுத்தை அறுத்திடுவேன் என கொலை மிரட்டல் விடுத்துள்ளதாக எதிரி மீது இதச 450, 366(ஏ) (2 எண்ணிக்கை), 376 உடன் இணைந்த 2012ம் வருடத்திய குழந்தைகள் பாலியல் தொல்லை தடுப்புச் சட்டம் பிரிவு 5(i) (2 எண்ணிக்கை), 5(1) (ஒரு எண்ணிக்கை), 5(m) r/w 6 (2 எண்ணிக்கை), மற்றும் இதச 506(ii) பிரிவுகளின் கீழ் பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண் 16/2014 இல் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் மாவட்ட குற்றப் புலனாய்வுத் துறை கோயமுத்தூர் அவர்கள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்த வழக்கானது 31.7.2014ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டவுடன் குவிமுச 207ஆவது பிரிவின் கீழ் வழக்காவணங்களின் நகல்கள் யாவும் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டு எதிரியிடம் குற்றம் பற்றி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனையப் போதுமான ஆதாரங்கள் உள்ளனவாக இந்நீதிமன்றத்திற்கு தோன்றியமையால் எதிரி மீது இதச 450, 366(ஏ) (2 எண்ணிக்கை), 376 உடன் இணைந்த 2012ம் வருடத்திய குழந்தைகள் பாலியல் தொல்லை தடுப்புச் சட்டம் பிரிவு 5(i) (2 எண்ணிக்கை), 5(i) (ஒரு எண்ணிக்கை), 5(m) r/w 6 (2 எண்ணிக்கை) மற்றும் 506 (ii) "பிரிவுகளின் கீழ்குற்றச்சாட்டு வனைந்து எதிரிக்கு படித்துக் காட்டிவிளக்கிக் கூறி வினவியபோதும் எதிரி, தான் குற்றவாளியில்லை என்றார்.

3. இவ்வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் சாட்சிகள் பட்டியலில் 62 சாட்சிகள் காண்பிக்கப்பட்டு அவர்களில் 23 சாட்சிகள் அ.சா. 1 முதல் 23 ஆக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் 30 வரையான சான்றாவணங்களும் 1 முதல் 14 (வரிசை) வரையான சான்றுப் பொருள்களும் குறியீடு செய்யப்பட்டன. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவோ சான்றாவணங்களோ, சான்றுப் பொருள்களோ குறியீடு செய்யப்படவோ இல்லை. மகாலட்சுமியினுடைய உடலில் கண்டறியப்பட்ட காயங்களை பரிசோதிக்கும்போது அந்த பெண்ணின்

தாயாரின் இசைவைப் பெற்றுள்ளார். உடல் பரிசோதனையின்போது அந்த சிறுமி பயந்து காணப்பட்டார். அந்த பெண்ணின் கழுத்துப் பகுதியில் ஒரு கன்றிய காயம் 3x1 CM அளவில் காணப்பட்டது. அதே கழுத்தில் 2X1 CM அளவில் ஒரு கன்றிய காயம் காணப்பட்டது. அதே போல் அந்த பெண்ணின் வலது உதட்டின் மேற்புறத்தில் 3X1 CM அளவில் ஒரு கன்றிய காயம் காணப்பட்டது. இடது பக்க கீழ் உதட்டில் கீழ் பகுதியில் 2 CM X 1 CM அளவில் ஒரு கன்றியகாயம் காணப்பட்டது. முதுகின் இடது பின் புறத்தில் சிராய்ப்புக் காயம் 4X3 CM அளவில் காணப்பட்டது. நடு முதுகில் 4X4 CM அளவில் ஒரு சிராய்ப்புக் காயம் காணப்பட்டது. வலது தொடையில் முன்புறத்தில் ஒரு கன்றிய காயம் 6X4 CM அளவில் காணப்பட்டது. இடது தொடையிலும் கன்றிய காயம் 6X5 CM அளவில் காணப்பட்டது. மேற்படி பெண்ணினுடைய பிறப்புறுப்பில் லேமியா மெஜ்ரா என்ற பகுதியில் 2X1 CM அளவில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது மற்றும் ஒரு சிதைந்த காயமும் 3X1 CM அளவில் வலது பக்கமாக லேமியா மைனோரா என்ற பகுதியில் காணப்பட்டது. மேலும் ஒரு சிதைந்த காயம் 3X2 அளவில் இடது பக்க லேமியா மைனோரா என்ற பகுதியில் காணப்பட்டது.

மேலும் ஒரு சிதைந்த காயம் 8 CM அளவில் பிறப்புறுப்பின் வாய் புறத்தில் இருந்து ஆசனவாய் பகுதி வரை நீண்டு காணப்பட்டது. இதனை மருத்துவ ரீதியாக சொல்ல வேண்டுமென்றால் 6 மணி கடிகாரம் காட்டுவது போல் ஆரம்பித்து 12 மணி ஆகும்போது கடிகார முள் இருக்கும் அமைப்பில் காணப்பட்டது. இந்த காயத்தில் புதிதாக ரத்தக் கசிவு காணப்பட்டது. அவருடைய கன்னித் திரை கிழிந்திருந்தது. அவ்வாறு கிழிந்த பகுதி 4 மற்றும் 8 மணி அளவில் கடிகார முள் அமைப்பில் காணப்பட்டது. அதிலும் ரத்த ஒழுக்கு இருந்தது. மேலும் ஒரு சிதைந்த காயம் 2X2 CM அளவில் சிறுநீர் துவாரத்தின் வெளிப் பகுதியில் காணப்பட்டது.

**45. மேற்படி காயங்களின் தன்மைகளை உற்று நோக்கியதில் இத்தகைய காயங்களுக்கு ஆளாக்கப்பட்ட 12 வயதுக்கு உட்பட்ட சிறுமி எந்த அளவிற்கு நரக வேதனை அடைந்திருப்பார் என்பதனை விளக்குவதற்கு நமக்கு வார்த்தைகளே கிடைக்கவில்லை.**

**46.** இந்த வழக்கில் சற்று ஏறக்குறைய அனைத்து புலன் விசாரணையும் தொய்வில்லாமல் போர்க்கால அடிப்படையில் அப்போதைய முதற்கட்ட புலன்விசாரணை அதிகாரி அ சா 22 திரு.முத்துராஜன், காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்பாடுகள் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. இவர் எதிரியை கைது செய்தபோது அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் செந்தில் மற்றும் பாலசுப்ரமணியன் முன்னிலையில் கணினியில் எதிரி சொல்லச் சொல்ல தயாரித்துள்ளார். அதன் பிரதியை எடுத்து எதிரியிடம் கையெழுத்து பெற்றுள்ளார். சம்பந்தப்பட்ட சாட்சிகளும் கையெழுத்திட்டுள்ளார்கள். இதில் அனுமதிக்கப்பட்ட வாக்குமூல சாராம்சங்களின் அடிப்படையில் எதிரி எடுத்து ஆஜர்படுத்திய அவரது உடைகள், மணிபர்ஸ் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளது. இப்புலன் விசாரணை அதிகாரயைக் குறுக்கு விசாரணை செய்தபோது எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்திடவில்லை என்றோ அல்லது அதில் உள்ள கையெழுத்து எதிரியினுடையது அல்ல என்றோ அனுமானம் உரைக்கவில்லை. இதற்கு நேர் மாறாக குவிமுச 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்டபோது எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்று மறுத்துரைத்துள்ளார். ஆனால், இதுபற்றி காவல் அடைப்பின்போது இவர் நடுவரிடத்தில் ஏதும் குறிப்பிடவில்லை.

**47.** இவை எல்லாவற்றுக்கும் மேலாக மருத்துவர் அ சா 9 பாண்டீஸ்வரன் என்பவர் தம்முடைய சாட்சியத்தில் 2x1 CM அளவில் பச்சை நிறத்தில் எதிரியின் ஆண் குறியின் முன்பகுதியிலும் கீழ் பகுதியிலும் கன்றிய காயம் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். மேலும் இவர் தன் முதல் விசாரணையில் பலவந்தமாக உடலுறவில் ஈடுபடும்போது இந்த கன்றிய காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றும் குறிப்பிட்டுள்ளார். இதன் பிறகும் கூட இந்த மருத்துவரிடத்தில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தேவையில்லை என்று பகரப்பட்டது. இந்த காயம் குறித்து எதிரி குவிமுச 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவும்போது ஒப்புக்கொண்டுள்ளார்.

**48.** எனவே, இதுகாறும் விவாதித்த அம்சங்களின் அடிப்படையில் எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு குன்றின் மேல் இட்ட விளக்கு போலவும், உள்ளங்கை நெல்லிக்கனி போலவும் நிரூபிக்கப்பட்டு பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

**49.** எனவே எதிரி **9.6.2014**ஆம் தேதி அன்றும் **11.6.2014**ஆம் தேதியன்றும் சம்பவ இடங்களான TELC திருச்சபை வளாகத்திற்குள்ளே இருந்த விடுதியினுள் அத்து மீறி நுழைந்து விடுதியில் தங்கிப் படித்த சிறுமிகள்

அ சா 1 மற்றும் 2 ஐ மரண பயத்திற்கு உட்படுத்தி கொலை மிரட்டல் விடுத்து விடுதியில் இருந்து சர்வோதயா சங்க கட்டிடத்திற்கு கடத்திச் சென்று (Even though the nomenclature of the offence u/s 450 KPC speaks about house tresspass, this court is satisfied that the place of occurrence being a building, it covers house tresspass as it is defined in section 442 IPC) பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாக்கியுள்ளார் என்றும் எனவே, எதிரி மீதான குற்றச்சாட்டு இதச 450, 366 (2 எண்ணிக்கை), சிறுவர் பாலியல் பலாத்கார பாதுகாப்புச் சட்டப்பிரிவு 5(1ஐ) (2 எண்ணிக்கை) 5(எல்) (ஒரு எண்ணிக்கை) 5(எம்) உடன் இணைந்த மேற்படி சட்டப்பிரிவு 6இன் கீழும் இதர பிரிவு 506(ii) (2 எண்ணிக்கை)இன் கீழ் குற்றம் இழைத்துள்ளார் என்றும் முடிவு செய்து எதிரியை குற்றவாளி என்று தீர்மானிக்கின்றேன்.

50. மேற்படி தீர்மானத்தின் அடிப்படையில் எதிரி குற்றவாளி என்று முடிவு செய்திருப்பதால் எதிரிக்கு வழங்கவிருக்கும் தண்டனை குறித்து குவிமுச பிரிவு 235(2) வலியுறுத்தும் வகையில் கேள்வி கேட்கப்பட்டது. தனியாக தண்டனை குறித்து கூற எதுவும் இல்லை.

51. மேற்படி பதிலுக்கு பிறகு எதிரிக்கு வழங்கவிருக்கும் தண்டனை குறித்து ஆராயும்போது எதிரியுடைய வயது மற்றும் குடும்பப் பின்னணியை கருத்தில் கொள்ளும் அதே நேரத்தில் பாதிக்கப்பட்ட 2 சிறுமிகளின் எதிர்காலம் முழுமையாக சிதைக்கப்பட்டுள்ளது. சித்ரவதைக்கும் கொடுமைக்கும் ஆளாக்கப்பட்டுள்ளார்கள். கொடூரமான முறையில் ஒருவர் பின் ஒருவராக அ சா 1 ஐயும் அ சா 2ஐயும் தொடர்ந்து காட்டுமிராண்டித்தனமாக தன் ஆண் குறியில் காயம் ஏற்படும் வகையில் குற்றம் இழைத்துள்ளார். இவர் சட்டத்தைக் குறித்தும் சமுதாயத்தைக் குறித்தும் அஞ்சுபவராக இல்லை. இச்சம்பவம் தகவல் தொடர்பு சாதனம் மூலம் மக்களுக்குத் தெரிய வந்தபோது ஒட்டு மொத்த மாவட்டமும் அதிர்ந்து போனது. தமிழகமே திகைத்தது. மேலும் அரசு இயந்திரங்கள் துரித கதியில் செயல்பட்டன. இத்தகைய குற்றவாளிகளை கொலையினும் கொடிய குற்றம் செய்துள்ளதாகவும் இத்தகைய எதிரிக்கு வழங்கும் தண்டனையின் அளவு அடிப்படையில் சமுதாயத்தில் யாரொருவரும் இனியொரு காலத்தில் இதுபோன்ற குற்றம் இழைக்க அஞ்ச வேண்டும், கனவிலும் கருதக்கூடாது. இந்த கருத்தைத் தான் தெய்வப் புலவர் திருவள்ளுவர் அவர்கள்

**தக்காங்கு நாடி தகை செல்லா வண்ணத்தால்**
**ஒத்தாங்கு ஒறுத்தல் வேந்து (குறள் 561)**
என்றும்
**கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ**
**களை கட்டாதனோடு நேர். (குறள் 551)**

என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே, எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்குவதுதான் இந்த வழக்கின் தன்மைக்கும் குறிப்பாக குற்றம் இழைத்துள்ள கொடூரமான தன்மைக்கும் ஒரு பாடமாக இருக்கும் என்று மன்றம் உள நிறைவு அடைகின்றது.

52. முடிவாக எதிரியை இதச 450, 366 (2 எண்ணிக்கை) 376 உடன் இணைந்த பாலியல் பலாத்கார பாதுகாப்புச் சட்டம் பிரிவுகள் 5(1) (2 எண்ணிக்கை) மற்றும் 5(1) மற்றும் 5(m) r/w 6, மற்றும் இதச 506(ii) பிரிவிகளின் கீழான குற்றத்திற்காக கீழ்கண்டவாறு தண்டனைகள் வழங்கப்படுகின்றன. எதிரி இத்தண்டனைகளை ஏக காலத்தில் சேர்த்து அனுபவிக்க வேண்டும் என்றும் ஏற்கெனவே இவ்வழக்கு குறித்து காவலில் இருந்த நாட்களை குவிமுச 428 பிரிவின்கீழ் தண்டனைக் காலத்தில் கழித்துக் கொள்ள வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

| | |
|---|---|
| இதர 45வது பிரிவின் கீழான குற்றத்திற்காக | **10 (பத்து).** வருட கடுங்காவல் சிறை தண்டனையும் மற்றும் **ரூ.1000/–** (ஆயிரம் மட்டும்) அபராதம் விதித்தும் கட்டத் தவறினால் 3 மாத மெய்க் காவல் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. |
| இதச 366 (2 எண்ணிக்கை) பிரிவின் கீழான குற்றத்திற்காக | **ஒவ்வொரு எண்ணிக்கைக்கும் தலா 10 (பத்து)** ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் மற்றும் **ரூ.1000/– (ஆயிரம் மட்டும்)** அபராதம் விதித்தும் கட்டத் தவறினால் ஒவ்வொரு எண்ணிக்கைக்கும் தலா **3 மாத** மெய்க்காவல் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. |

| | |
|---|---|
| இதச 376 உடன் இணைந்த குழந்தைகள் பாலியல் பலாத்கார பாதுகாப்புச் சட்டம் பிரிவுகள் 5(l) (2 எண்ணிக்கை) மற்றும் 5(l) மற்றும் 5(m) r/w 6 இன் கீழான குற்றத்திற்காக | **இரட்டை ஆயுள் தண்டனை விதித்தும் மற்றும் ரூ.1000/–** (ஆயிரம் மட்டும்) அபராதம் விதித்தும் உத்தரவிடப்படுகிறது. |
| இதச 506(ii) (2 எண்ணிக்கை)வது பிரிவின் கீழான குற்றத்திற்காக | **தலா 7 (ஏழு)** ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் மற்றும் **ரூ.1000/– (ஆயிரம் மட்டும்)** அபராதம் விதித்தும் கட்டத் தவறினால் 3 மாத மெய்க்காவல் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. |

மொத்த அபராதத் தொகை **ரூ.7000/–**

**53. தீர்ப்பு தயாரித்துக்கொண்டு இருக்கும்போது பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் அவர்களுக்கு தகவல் கொடுத்து TELC திருச்சபை வளாகத்திற்குள் இயங்கி வந்த சிறுவர்களுக்கான விடுதி இளைஞர் நீதிச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டதா அல்லது சட்டத்திற்குப் புறம்பாக இயங்கி வந்ததா என்பதைக் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் இன்று மேற்படி ஆய்வாளர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.**

**இந்த அறிக்கை 2 பக்கங்களைக் கொண்டது. இதனுடன் ஒரு அச்சு முதல் தகவல் அறிக்கையின் ஒளி நகலும் ஜி. விஜயா மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அவர்கள் உதவி ஆய்வாளர் பொள்ளாச்சி கிழக்கு காவல் நிலைய ஆய்வாளருக்கு TELC திருச்சபை மீது இளைஞர் நீதிச் சட்டப்படி பதிவு செய்யப்படாமல் இயங்கி வருவதைக் குறித்து கொடுத்த புகார் மனு ஒளி நகல், இப்புகாருக்கு முன்பாக TELC நிறுவனத்திற்கு திரு. செந்தில்குமார், District Child Protection Officer Dt 18.11.2013 வழங்கிய முன் அறிவிப்பு ஒளி நகல் இதற்கு TELC Home for Children Pollachi Manager/ Correspondent அவர்கள் கொடுத்த பதில் ஆகியவற்றைத் தாக்கல் செய்துள்ளார்.**

**இவற்றுக்கு 1 முதல் 6 என்று பக்க எண்கள் வழங்கப்பட்டது. இது நீதிமன்ற சான்றாவணம் 1 வரிசையாக குறியீடு செய்யப்பட்டது. இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பாகவே TELC திருச்சபை நிர்வாகம் இளைஞர் நீதி சட்டப்படி பதிவு செய்யாமல் அனுமதியில்லாமல் தன்னிச்சையாக குறிப்பாக 12 வயதுக்கும் கீழான குழந்தைகளை விடுதி என்ற பெயரில் தங்க வைத்துள்ளார். இது இந்த நாட்டின் சட்டத்தின் மாட்சியை மதிக்காத போக்காக உள்ளது. எனவே, பொள்ளாச்சி கிழக்கு காவல் நிலைய குற்ற எண் 311/2014 இதச பிரிவு 188, 336 மற்றும் 342இன் கீழாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் முதல் எதிரி பாக்கியநாதன் நிர்வாகி என்றும் 2ஆவது எதிரி சுரேஷ்குமார் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

**இந்த TELC நிர்வாகம் விடுதி என்ற பெயரில் சிறார்களை சட்டத்திற்கு புறம்பாக அடைத்து வைத்துள்ளார்கள். அவ்வாறு அடைத்து வைத்த சிறார்களுக்கு போதிய பாதுகாப்பு இல்லை. சமூக விரோதிகள் எளிதாக நுழையவும் குற்றம் இழைக்கவும் ஏதுவாக உள்ள பகுதியாக பாதுகாப்பின்றி இருந்துள்ளது. எனவே, இந்த சிறுமிகளுக்கு ஏற்பட்ட பாலியல் தொல்லைக்கு TELC நிர்வாகத்தின் பொறுப்பற்ற தன்மையும் சட்டத்திற்கு புறம்பாக விடுதி என்ற பெயரில் சிறுவர்களை அடைத்து வைத்திருப்பது வன்மையாக கண்டிக்கத் தக்கது.**

**எனவே, இந்த TELC நிர்வாகம் இத்தீர்ப்புரை கிடைக்கப் பெற்று 30 நாட்களுக்குள் அ சா 1,2 ஆக உள்ள சிறுமிகளுக்கு தலா 2.5 லட்ச ரூபாய் நஷ்ட ஈடாக வழங்க வேண்டும் என்று உத்தவிடுகிறது.** (TELC திருச்சபையானது வழக்கில் 3ம் நபர் என்பதால் அபராதப் பதிவேட்டில் இடம் பெறவில்லை).

**54.** இந்த பாதிக்கப்பட்ட சிறுமிகளுக்கு அரசாங்கம் ஏற்கெனவே தமிழக முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து நிவாரணத் தொகை வழங்கியுள்ளது. இந்நிலையில், இச்சிறுமிகளுக்கு ஆகும் கல்விச் செலவை எதிர்காலத்தில் அரசாங்கம் ஏற்க வேண்டும் என்றும் இவர்களின் கல்வி தகுதிக்கு ஏற்றவாறு இவர்களுக்கு அரசுப் பணி வழங்க வேண்டும் என்று சிறுவர் பாலியல் பாதுகாப்புச் சட்டம் 33(8)இன் கீழாக இம்மன்றம் பரிந்துரை செய்கின்றது.

**55.** TELC திருச்சபை நிர்வாகம் இத்தீர்ப்புரை கிடைக்கப் பெற்று 30 நாட்களுக்குள் நஷ்டஈடு வழங்க தவறும்பட்சத்தில் இந்த தொகையை வருவாய் வசூலிப்பு சட்டப்படி மாவட்ட ஆட்சியர் செயல்பட வேண்டும் என்று இம்மன்றம் கேட்டுக்கொள்கிறது. அவ்வாறு செலுத்தப்படும் தொகையை ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இச்சிறுமிகளின் பெயரில் அவர்களது பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் உடன் இணைந்து கூட்டுக் கணக்கு தொடங்கி அதில் வைப்பீடு செய்ய வேண்டும் வைப்பீட்டு தொகையையும் வட்டியையும் தங்களது 18 வயது பூர்த்தியடைந்த பிறகு அடைய வேண்டும் என்றும் உத்தரவிடுகிறது.

**56.** மேலே குறிப்பிட்ட TELC திருச்சபை நிர்வாகத்திடம் நஷ்ட ஈடு செலுத்த தவறும்பட்சத்தில் மாவட்ட ஆட்சியரை அணுகவும் மன்ற உத்தரவை சட்டப்படி நிறைவேற்றவும் வைப்பீடு செய்யவும் தமிழக அரசு பாதிக்கப்பட்ட சிறுமிகளுக்கு எதிர்கால கல்வி வழங்குதல் குறித்தும் அரசு வேலை வாய்ப்பை பெற்று தரவும் பாலமாக செயல்பட வழக்கறிஞர் திரு.கே. சண்முகானந்தன் அவர்களை நீதிமன்ற ஆணையாளராக நியமித்தும் மேற்படி ஆணையாளர் இச்சிறுமிகளின் நலன்களை குறித்து சட்ட பூர்வமான அனைத்து விதமான நடவடிக்கைகளையும் எடுத்து இம்மன்ற பரிந்துரைகள் சிறுமிகளை சென்றடையும் வகையில் செயல்பட வேண்டும். இலவச சட்ட உதவி மையம் கோவை மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட விதிமுறைகளின்படி ஆணையர் ஊதியம் செலுத்த வேண்டும் என்றும் அதன் அடிப்படையில் தலைவர், இலவச சட்ட உதவி மையம், கோவை அவர்களை இம்மன்றம் நீதியின்பால் உகந்து கேட்டுக் கொள்கின்றது.

நீதிமன்ற ஆணையர் தம்முடைய நடவடிக்கைகள் குறித்து ஒவ்வொரு ஆண்டும் 31ம் தேதி மார்ச் மாதத்திற்குள் தம் அறிக்கையை இம்மன்றத்திற்கு எழுத்துப்பூர்வமாக சிறுமிகள் 18வது பூர்த்தியடையும் வரையில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் நீதிமன்ற ஆணையம் வழங்க உத்தரவிடுகின்றது.

**57.** இத்தீர்ப்பினை முற்று செய்வதற்கு முன்பாக இந்த வழக்கில் சற்றேறக்குறைய பெரும்பகுதியான புலன் விசாரணையை தொய்வின்றி தொடர்ந்து போர்க்கால அடிப்படையில் புலன் விசாரணை செய்த அப்போதைய காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் திரு. முத்துராஜ் அவர்களை இந்த மன்றம் வெகுவாகப் பாராட்டுவதுடன் இதே போன்ற செயல்பாடுகளை காவல்துறையினர் எல்லா வழக்குகளிலும் முனைந்து செயல்பட வேண்டும் என்று இந்த மன்றம் கேட்டுக்கொள்கிறது.

**58.** கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திருமதி ஆர். சரோஜினி அவர்கள் அரசு தரப்பு வழக்கை விரைந்து நடத்துவதற்கு ஏதுவாக செயல்பட்டது குறித்தும் இந்த மன்றம் பாராட்டை தெரிவித்துக்கொள்கின்றது.

**59.** இந்த வழக்கில் குறிப்பாக பாராட்ட வேண்டும் என்றால் எதிரிக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கே. மயில்வாகனன் அவர்கள் நீதிமன்றத்திற்கு கொடுத்த ஒத்துழைப்பும் அவர் ஆற்றிய தார்மீகக் கடமையையும் இந்த மன்றம் சிறப்பித்துப் பாராட்டுகிறது.

**60.** வழக்கு சம்பவம் 11.6.2014ஆம் தேதி நடந்திருந்தும் 6 மாத காலத்திற்குள்ளாக விரைந்து நீதி வழங்குவதற்கு ஏதுவாக செயல்பட்ட அனைத்து தரப்பினையும் இந்த மன்றம் வெகுவாகப் பாராட்டுவதுடன் இதே போன்று நீதியை விரைந்து வழங்குவதற்கு இந்த வழக்கில் ஒத்துழைத்ததுப்போலவே அனைத்து வழக்குகளிலும் பாரபட்சமின்றி செயல்பட வேண்டும் என்று காவல் துறையை இந்த மன்றம் கேட்டுக் கொள்கிறது.

**61.** இத்தீர்ப்பின் நகலை தலைவர், இலவச சட்ட உதவி மையம் கோவை மாவட்டம், மாவட்ட ஆட்சியர் கோவை மாவட்டம், **முதன்மை செயலர், தலைமைச் செயலகம் சென்னை** அவர்களுக்கும் TELC Home Church Pollachi அவர்களுக்கும் நீதிமன்ற ஆணையர் திரு.கே. சண்முகானந்தன் அவர்களுக்கும் வழங்க உத்தரவிடுகின்றது.

**62.** இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட பி ஆர் 33/2014இல் தாக்கல் செய்யப்பட்ட சா பொ 1 முதல் 12 வரையிலான சொத்துக்களை மேல் முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் அழிக்கப்படவும், சா பொ 13 வரிசை 11 போட்டோக்கள் மற்றும் சா பொ 14 வரிசை 2 குறுந்தகடுகள் ஆகியவற்றை வழக்குக் கோப்புடன் வைக்கப்படவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்
அமர்வு நீதிபதி
மகளிர் நீதிமன்றம்
கோயமுத்தூர்

## அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் பட்டியல்

| | |
|---|---|
| அ.சா. 1 | இளவர் திலகவதி |
| அ.சா. 2 | இளவர் மகாலட்சுமி |
| அ.சா.3 | ராஜேந்திரன் |
| அ.சா. 4 | செல்வி |
| அ.சா.5 | மணிகண்டன் |
| அ.சா.6 | சுரேஷ்குமார் |
| அ.சா.7 | டாக்டர் AVR சுரேஷ்காந்த் |
| அ.சா.8 | டாக்டர் சுகன்யா |
| அ.சா.9 | டாக்டர் பாண்டீஸ்வரன் |
| அ.சா.10 | திரு.கே.லிங்கம், நீதித்துறை நடுவர் எண் 1 பொள்ளாச்சி |
| அ.சா.11 | திரு.கே.ஹரிஹரன், நீதித்துறை நடுவர் எண் 2 பொள்ளாச்சி |
| அ.சா.12 | கே. ரேணுகாதேவி, நீதித்துறை நடுவர் எண் 1 கோயமுத்தூர் |
| அ.சா.13 | இந்திராணி, பள்ளி தலைமை ஆசிரியை |
| அ.சா.14 | ஷீலா கேதரின் ஜெயா, பள்ளி தலைமை ஆசிரியை |
| அ.சா.15 | திரு. முனிராசன், உதவி இயக்குநர், இயங்கும் தடய அறிவியல் ஆய்வகம், கோயமுத்தூர் |
| அ.சா.16 | கிருபைராஜ் |
| அ.சா.17 | பாலசுப்ரமணியன் |
| அ.சா.18 | திருமதி. பவானி, Scientific Officer, Department of Serology, தடய அறிவியல் ஆய்வகம், சென்னை |
| அ.சா.19 | திருமதி. லட்சுமி பாலசுப்ரமணியன், Asst. Chemical Examiner to Government and Deputy Director, DNA Division, தடய அறிவியல் ஆய்வகம், சென்னை |
| அ.சா.20 | இளங்கோ, போட்டோகிராபர் |
| அ.சா.21 | திருமதி. சி. தமிழ்ச்செல்வி, காவல் ஆய்வாளர் |
| அ.சா.22 | திரு சு.முத்துராஜன், காவல் துணைக் கண்காணிப்பாளர் பொள்ளாச்சி உட்கோட்டம், கோவை |
| அ.சா.23 | திரு.மாடசாமி, கூடுதல் காவல் கண்காணிப்பாளர். |

எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் – இல்லை

அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களின் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.த.சா.ஆ.1 | 12.6.2014 | புகார் |
| 2. | அ.த.சா.ஆ.2 | 12.6.2014 | கைப்பற்றுதல் மகசர் (14.30 மணி) |
| 3. | அ.த.சா.ஆ.3 | 18.6.2014 | மகாலட்சுமிக்கான வயதுச் சான்றிதழ் |
| 4. | அ.த.சா.ஆ.4 | 18.6.2014 | திலகவதிக்கான வயதுச் சான்றிதழ் |
| 5. | அ.த.சா.ஆ.5 | 12.6.2014 | மகாலட்சுமிக்கான மருத்துவப் பரிசோதனை அறிக்கை |
| 6. | அ.த.சா.ஆ.6 | 12.6.2014 | திலகவதிக்கான மருத்துவப் பரிசோதனை அறிக்கை |
| 7. | அ.த.சா.ஆ.7 | 17.6.2014 | எதிரிக்கான ஆண்மைத் தன்மை அறிக்கை |
| 8. | அ.த.சா.ஆ.8 | 17.6.2014 | பாதிக்கப்பட்ட பெண்களுக்கான குவிமுச 164 பிரிவின் கீழான வாக்குமூலம் (1 முதல் 38 பக்கங்கள்) |
| 9. | அ.த.சா.ஆ.9 | 27.6.2014 | அடையாள அணிவகுப்பு நடவடிக்கை கோப்பு (1 முதல் 82 பக்கங்கள்) |
| 10. | அ.த.சா.ஆ.10 | 26.6.2014 | சாட்சிகளின் குவிமுச 164 பிரிவின் கீழான வாக்குமூலங்கள் (சாட்சிகள் 3,10,29 முதல் 31, மற்றும் 38 |

| | | | |
|---|---|---|---|
| 11. | அ.த.சா.ஆ.11 | 2.7.2014 | திலகவதிக்கான பள்ளிச் சான்றிதழ் |
| 12. | அ.த.சா.ஆ.12 | 2.7.2014 | மகாலட்சுமிக்கான பள்ளிச் சான்றிதழ் |
| 13. | அ.த.சா.ஆ.13 | 12.6.2014 | பார்வை மகசர் (15.20 மணி) |
| 14. | அ.த.சா.ஆ.14 | 12.6.2014 | கைப்பற்றுதல் மகசர் (16.00 மணி) |
| 15. | அ.த.சா.ஆ.15 | 12.6.2014 | பார்வை மகசர் (16.15 மணி) |
| 16. | அ.த.சா.ஆ.16 | 12.6.2014 | கைப்பற்றுதல் மகசர் (17.00 மணி) |
| 17. | அ.த.சா.ஆ.17 | 14.6.2014 | எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ சா 17இன் கையெழுத்து |
| 18. | அ.த.சா.ஆ.18 | 14.6.2014 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி |
| 19. | அ.த.சா.ஆ.19 | 14.6.2014 | கைப்பற்றுதல் மகசர் (11.00 மணி) |
| 20. | அ.த.சா.ஆ.20 | 23.7.2014 | Serology Report (Blood Cloths) |
| 21. | அ.த.சா.ஆ.21 | 23.7.2014 | Serology report (Blood Samples, Gaze cloth) T.No.6258/2014 SER C 104/2014) |
| 22. | அ.த.சா.ஆ.22 | 23.7.2014 | DNA Report 149/14 |
| 23. | அ.த.சா.ஆ.23 | 23.3.2014 | DNA Report 173/14 |
| 24. | அ.த.சா.ஆ.24 | 12.6.2014 | முதல் தகவல் அறிக்கை |
| 25. | அ.த.சா.ஆ.25 | 12.6.2014 | மாதிரி வரைபடம் (முதலாவது சம்பவ இடத்திற்கானது) |
| 26. | அ.த.சா.ஆ.26 | 12.6.2014 | மாதிரி வரைபடம் (இரண்டாவது சம்பவ இடத்திற்கானது) |
| 27. | அ.த.சா.ஆ.27 | 17.6.2014 | திலகவதிக்கான சாதிச் சான்றிதழ் |
| 28. | அ.த.சா.ஆ.28 | 17.6.2014 | மகாலட்சுமிக்கான சாதிச் சான்றிதழ் |
| 29. | அ.த.சா.ஆ.29 | 17.6.2014 | எதிரிக்கான சாதிச் சான்றிதழ் |
| 30. | அ.த.சா.ஆ.30 | 20.6.2014 | சட்ட மாறுதல் அறிக்கை |

எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் – இல்லை

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றுப் பொருள்கள்**

| | |
|---|---|
| சா.பொ.1 | பொடிக்கலர் பாவாடை (திலகவதியினுடையது) |
| சா.பொ.2 | பொடிக்கலர் மேல் சட்டை (திலகவதியினுடையது) |
| சா.பொ.3 | ஆரஞ்சுக் கலர் மிடி (மகாலட்சுமியினுடையது) |
| சா.பொ.4 | வெள்ளை நிற டாப் (மகாலட்சுமியினுடையது) |
| சா.பொ.5 | ரத்தக்கறை படிந்த ஜட்டி (மகாலட்சுமியினுடையது) |
| சா.பொ.6 வரிசை | 2 பத்து ரூபாய் நோட்டுக்கள் |
| சா.பொ.7 | எவர் சில்வர் கரண்டி |
| சா.பொ.8 | ஒரு ஜோடி செருப்பு |
| சா.பொ.9 | பேண்ட் |
| சா.பொ.10 | டீ சர்ட் |
| சா.பொ.11 | மணிபர்ஸ் (ஒரு பிளேடு மற்றும் 2 ரூபாய் நாணயங்கள் உடன்) |
| சா.பொ.12 | ஜட்டி |
| சா.பொ.13 வரிசை | 11 போட்டோக்கள் |
| சா.பொ.14 வரிசை | 2 குறுந்தகடுகள் |

**நீதிமன்ற சான்றாவணம் 1 –**

ஒரு அச்சுமுதல் தகவல் அறிக்கையின் ஒளி நகலும் ஜி. விஜயா மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அவர்கள் உதவி ஆய்வாளர் பொள்ளாச்சி கிழக்கு காவல் நிலைய ஆய்வாளருக்கு TELC திருச்சபை மீது இளைஞர் நீதிச் சட்டம் படி பதிவு செய்யப்படாமல் இயங்கி வருவதைக் குறித்து கொடுத்த புகார் மனு ஒளி நகல், இப்புகாருக்கு முன்பாக TELC நிறுவனத்திற்கு திரு.செந்தில்குமார், District Child Protection Officer Dt 18.11.2013 வழங்கிய முன் அறிவிப்பு ஒளி நகல், இதற்கு TELC Home for Children Pollachi, Manager / Correspondent அவர்கள் கொடுத்த பதில் ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளார்கள். இவற்றுக்கு 1 முதல் 6 என்று பக்க எண்கள்

எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றுப் பொருள்கள் இல்லை

ஒப்பம்
அமர்வு நீதிபதி
மகளிர் நீதிமன்றம், கோயமுத்தூர்

**குறிப்பு –**

1. வழக்கு விசாரணைக் காலத்தில் எதிரி காவலில் இருந்தார்.
2. சாட்சிகள் யாரும் விசாரணையின்றி 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்கப்பட்டது.
4. எதிரி அபராதத் தொகை செலுத்தவில்லை.
5. எதிரி காவலில் இருந்த 15.6.2014 இன்று வரையிலும் காவலில் இருந்த நாட்கள் குவிமுச 428 பிரிவின் கீழ் தண்டனைக் காலத்தில் கழித்துக் கொள்ள உத்தரவிடப்பட்டு எதிரி காவலுக்கு அனுப்பப்பட்டார்.
6. சொத்து பற்றிய உத்தரவு சொத்துக்கள் பதிவேட்டில் பதியப்பட்டது.
7. வழக்கின் முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

**திரு. N.பன்னீர் செல்வம்**
வழக்கறிஞர், கோயமுத்தூர்

## மாணவர்கள் குழந்தைத் தொழிலாளர்களாக மாறும் அபாயம்: ராஜபாளையம் நகரில் போதுமான அரசுப் பள்ளிகள் இல்லை

ராஜபாளையம் நகரில் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையை உயர்த்தாததால் பள்ளியில் இடம் கிடைக்காத மாணவ, மாணவிகள் குழந்தைத் தொழிலாளர்களாக மாறும் அபாயம் உள்ளது. இதைத் தடுக்க நகர்ப்பகுதியில் அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கையை உயர்த்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ராஜபாளையம் வட்டாரத்தில் அரசு, உள்ளாட்சி அமைப்புகள், அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், துவக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என 188 பள்ளிகள் உள்ளன. கிராமங்களில் உள்ள அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் மாணவ, மாணவிகள் சேர்க்கைக்கு பிரச்னை இல்லை, போதிய இடவசதி, வகுப்பறைகள் உள்ளன.

ஆனால், நகர்ப்பகுதி மாணவ, மாணவிகள் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு, பிளஸ் 1 சேர்க்கைக்கு இடம் கிடைக்காமல் திண்டாடுகின்றனர். பெற்றோர் ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை மெட்ரிக் பள்ளியில் படிக்க வைக்கின்றனர். ஆறாம் வகுப்பு வரும்போது கல்விக் கட்டணம், பஸ் கட்டணம் போன்றவை உயர்வதால் அரசுப் பள்ளிகளில் பிள்ளைகளை சேர்க்க விரும்புகின்றனர். இதனால் இங்கு போட்டி ஏற்படுகிறது. இந்த போட்டிகளில் சீட் கிடைத்த மாணவ, மாணவிகள் தங்களது படிப்பைத் தொடர்கின்றனர். மற்றவர்கள் மில், கார்மெண்ட்ஸ் போன்ற கூலித் தொழிலுக்கு செல்லும் நிலை உள்ளது. இதனால் குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை உயரும் அபாயம் உள்ளது. இதைத் தவிர்க்க நகராட்சிப் பகுதியில் உள்ள அரசு இடத்தைத் தேர்வு செய்து அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளை உடனே துவக்கவேண்டும். இதற்கான ஏற்பாடுகளை இப்போதே செய்தால் இனிவரும் ஆண்டுகளில் மாணவ, மாணவிகளுக்கு வசதியாக இருக்கும்.

கல்வித்துறை, நகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். ராஜபாளையம் காளிராஜன், ராஜபாளையம் மாணவ, மாணவிகள் மாநில அளவு, மாவட்ட அளவில் ரேங்க் பெறுகின்றனர். கல்வியின் வளர்ச்சி அந்தளவிற்கு உள்ளது. ஆனால் ஆறாம் வகுப்பு, பிளஸ் 2 வகுப்புகளில் பிள்ளைகளை சேர்க்க பெற்றோர் அலைவது பரிதாபமாக உள்ளது. நகரில் ஒரே ஒரு அரசுப் பள்ளிதான் உள்ளது.

**ஆதாரம்: தினமலர், ஜூன் 19, 2015**

...பக்கம் 16ன் தொடர்ச்சி

என்னவென்றால், சிறார் சட்ட நடைமுறையில் மாற்றத்தைக் கொண்டு வரும் மத்திய அரசின் இந்த முயற்சியானது இந்திய குழந்தைகளின் உரிமைகளை சீரழிப்பதாகும் என்பதே.

உச்சநீதிமன்றம்கூட, ஸ்வாமி எதிர் ராஜு (2014), சலில் பாலி எதிர் இந்திய ஒன்றியம் (2013) போன்ற வழக்குகளில் இந்திய சிறார் நீதி முறையை உறுதி செய்திருக்கிறது. மேலும், பாரதிய ஜனதா கட்சியின் உறுப்பினர் தலைமை தாங்கக்கூடிய நாடாளுமன்ற நிலைக்குழு அரசின் இந்த மசோதாவை முழுமையாக ஆராய்ந்து 16 முதல் 18 வயதுக்குள் இருக்கும் சிறார்களை, பெரியவர்களுக்கான குற்ற நடைமுறைச் சட்டத்துக்கு ஆளாக்குவது அரசியல் சட்டத்துக்கு முற்றிலும் எதிரானது என்று தெளிவாக சொல்லியிருக்கிறது.

எனவே, சிறார் நீதி சட்டத்தில் திருத்தம் கொண்டுவரும் மத்திய அரசின் இந்த மசோதாவை இதே போக்கில் அனுமதிக்கக் கூடாது. அறிவியல்ரீதியாக, நீதிநெறிரீதியாக, நாடாளுமன்ற ஜனநாயகரீதியாக கருத்தில் கொண்டு இந்த மசோதாவை எதிர்க்கும்படி ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற வரம்பு கடந்து அனைத்து அரசியல் கட்சிகளையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

## பெற்றோர்களை மிரட்டும் தனியார் பள்ளிகள்

கோவை மாவட்டத்தில் பல தனியார் பள்ளிகள் அரசு நிர்ணயித்த கட்டணத்தை விட கூடுதல் கட்டணம் செலுத்த பெற்றோர்களை நிர்பந்திப்பதோடு, அப்படிச் செலுத்தாத குழந்தைகளின் மாற்றுச் சான்றிதழ்களை வாங்கிச் செல்லுமாறு கட்டாயப்படுத்துவதாகவும் பல பகுதிகளில் புகார்கள் எழுந்துள்ளன. தனியார் பள்ளிகளுக்கு தகுந்த அறிவுறுத்தல்களை வழங்க வேண்டுமென்றும், அரசு ஆணையை மீறும் பள்ளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பெற்றோர்கள் வலியுறுத்துகின்றனர்.

கோவை விளாங்குறிச்சியில் உள்ள தனியார் பள்ளி நிர்வாகம், காலணி, சீருடைகளை கட்டாயம் பள்ளியில்தான் வாங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. இதைக் கண்டித்து பள்ளி நிர்வாகத்திடம் பெற்றோர்கள் அண்மையில் கேள்வி எழுப்பியுள்ளனர். ஒரு மாணவனை பள்ளி நிர்வாகம் அனுமதிக்க மறுத்துவிட்டதையடுத்து, அந்த மாணவருடன் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்துக்கு பெற்றோர் வந்து, அதே பள்ளியில் தனது மகன் பயில நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**மற்றொரு பள்ளி மீது புகார் :** மலுமிச்சம்பட்டி பகுதியைச் சேர்ந்த ஒருவரின் இரண்டு குழந்தைகள், ஒத்தக்கால்மண்டபம் பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் படித்து வருகின்றனர். அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட அந்தப் பள்ளியில் கட்டணம் வசூலிப்பது குறித்து பள்ளி நிர்வாகத்திடம் கேள்வி எழுப்பியதால், மாணவர்கள் இருவரையும் மாற்றுச் சான்றிதழை பெற்றுச் செல்லுமாறு பள்ளி நிர்வாகம் நிர்பந்தித்துள்ளது. இதைத்தொடர்ந்து, முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் அவர்கள் புகார் அளித்தனர். உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்பதாக, கல்வித்துறை அதிகாரிகள் அவர்களை அனுப்பி வைத்தனர்.

**பொள்ளாச்சி:** பொள்ளாச்சியைச் சேர்ந்த ஒருவரது குழந்தை, நல்லப்பா வீதியில் உள்ள தனியார் பள்ளியில் 4–ம் வகுப்பு படித்து வருகிறார். அரசு நிர்ணயித்தக் கட்டணத்தை காட்டிலும் 3 மடங்கு அதிகமாக கட்டணம் வசூல் செய்யப்படுவது குறித்து பள்ளி நிர்வாகத்திடம் கேள்வி எழுப்பியுள்ளார். அரசு நிர்ணயித்த கட்டணப்படி, ரூ. 7,700 மட்டுமே கட்ட முடியும் என தெரிவித்துள்ளார். ஆனால், அவரது கோரிக்கையை பள்ளி நிர்வாகம் ஏற்க மறுத்ததோடு, ரூ. 23 ஆயிரம் முதல் தவணையிலும், 2–வது மற்றும் 3–வது தவணைகளில் தலா ரூ. 4,500 வீதம் பணம் கட்ட வேண்டும் எனக் கூறியுள்ளனர். அரசு நிர்ணயித்த கட்டணத்தை மட்டும்தான் கட்ட முடியும் என்று கூறியதால், மாற்றுச்சான்றிதழை பெற்றுச் செல்லுமாறு பள்ளி நிர்வாகம் நிர்பந்தித்து வருகிறது. இது குறித்து கோவை ராமநாதபுரம் பகுதியில் உள்ள மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் அலுவலகத்துக்குச் சென்று புகார் அளித்தார்.

இப்புகார் குறித்து மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் கீதாவிடம் கேட்டபோது, புகாரின் பேரில் சம்பந்தப்பட்ட பள்ளிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. புகார்தாரரை, வரும் 22–ம் தேதி சம்பந்தப்பட்ட பள்ளிக்குச் செல்லுமாறு தெரிவித்துள்ளோம். அன்று, எங்களது அலுவலக ஊழியரும் சம்பந்தப்பட்ட பள்ளிக்குச் செல்ல உள்ளார். அரசு நிர்ணயித்த கட்டணத்தை செலுத்தினால் போதும் என அறிவுறுத்தல் வழங்கியுள்ளோம் என்றார்.

**ஆதாரம்: தி இந்து, ஜூன் 20, 2015**

# கல்வி உரிமைச் சட்டமும் விளிம்பு நிலை சமூகங்களும்

## களத்திலிருந்து ஒரு கண்ணோட்டம்

– பிபூதி பூஷன் மாலிக்

கல்வி உரிமைச் சட்டத்தின் பின்னணியில் கல்வி நிலை, வாய்ப்பு மற்றும் கல்விக்கான வழி ஆகியவை தொடர்பாக விளிம்புநிலை சமூகங்களின் நிலை எவ்வாறு இருக்கிறது என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது

சமுதாய முன்னேற்றத்திலும் பொருளாதார வளர்ச்சியிலும் கல்விக்கு உள்ள பங்கு எல்லோராலும் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது, ஏற்கப்பட்டுள்ளது. ஒருவரது செயல்திறனையும் மதிப்பிடும் திறனையும் வளர்த்தெடுக்க கல்வி உதவுகிறது. தனி மனிதர்களுக்கும் குழுவாக இயங்குவோருக்கும் புதிய வாய்ப்புகளை கல்வி திறந்துவிடுகிறது. மேலும் அது உழைப்புச் சந்தைக்கான தொடர்புகளையும் ஏற்படுத்துகிறது. மக்களுக்கான வாழ்வாதாரத்தையும் வழங்குகிறது. கல்வி என்பது ஒருவரது திறமையை மேம்படுத்துகிற கருவி மட்டுமல்ல. மாறாக, சமுதாய வாழ்க்கையில் ஜனநாயகப் பங்கேற்பை மேம்படுத்துகிற செயலூக்கமுள்ள ஏற்பாடும் ஆகும். ஆகவே, சமூக அதிகாரம், பொருளாதார அதிகாரம் ஆகியவற்றை நிலைநாட்டுவதில் கல்வி ஒரு செயல்முனைப்புமிக்க, ஆற்றல்மிக்க சக்தியாக இருக்கிறது. ஆனால், அதன் செயல்திறன் என்பது அது எந்த அளவிற்குப் பரவலாக்கப்படுகிறது. அது எந்த அளவிற்கு பயன்படுத்தப்படுகிறது என்பதையும், சமூக சூழல்களையும் சார்ந்தே இருக்கிறது.

இந்தத் திசையில் ஒரு தனித்துவமிக்க முயற்சியாக வந்ததுதான் குழந்தைகளின் இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் – 2009. பல முன்வரைவுகள் திரும்பத் திரும்பத் தயாரிக்கப்பட்டு இறுதியாக வந்ததுதான் இந்தச் சட்டம். இந்தச் சட்டத்தில் அனைவரையும் உள்ளடக்குகிற ஒரு தன்மை இருப்பதாகத் தெரிகிறது. விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட சமூகங்களின் கல்வித் தரநிலைகளை உயர்த்துவதற்கு இந்தச் சட்டம் முயல்கிறது. எந்த ஒரு குழந்தையும் கல்வியைத் தனது அடிப்படை உரிமையாகக் கோருவதற்கு இந்தச் சட்டம் ஒரு கருவியாகப் பயன்படுகிறது. ஆயினும், சட்டத்தின் விதிகளையும், அவை செயல்படுத்தப்படும் விதங்களையும் உற்றுநோக்கினால் பல கவலைக்குள்ளாக்கும் அம்சங்கள் இருப்பது வெளிப்படுகின்றன. தலித் சமூகங்களும், இதர பிற்படுத்தப்பட்ட சமூகங்களும், சிறுபான்மையினரும் மிகுதியாக உள்ள மாநிலம் உத்தரப் பிரதேசம். கடந்த சில ஆண்டுகளாகவே இந்த மாநிலத்தில் கல்வி உரிமைச் சட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுதொடர்பான பிரச்சனைகளை புரிந்துகொள்வதற்காக லக்னோ மாவட்டத்தில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

### ஆய்வு முறை

ஏழ்மையான பகுதிகள் குடிமைச் சமூக (பிஏசிஎஸ்) அமைப்பின் ‘சஷாக்தா பச்சாபன்’ திட்ட ஆதரவோடு, விக்யான் ஃபவுண்டேசன் அமைப்பு, லக்னோ மாவட்டத்தில் இந்தச் சட்டத்தை செயல்படுத்துவதற்கான இயக்கத்தை நடத்திக்கொண்டிருக்கிறது. மாவட்டத்தில் உள்ள 48 குடிசைப் பகுதிகளிலும் 32 கிராமங்களிலும் இந்த அறக்கட்டளை அமைப்பு செயல்படுகிறது. 48 குடிசைப் பகுதிகளிலும் 16 நகராட்சி வார்டுகளில் பரவிக்கிடக்கின்றன. 32 கிராமங்களில் 23 கிராமப் பஞ்சாயத்துகளில், சின்னாட், புக்ஷி கா தலாப் ஆகிய இரண்டு வட்டாரங்களிலும் அமைந்துள்ளன.

ஆய்வுகளுக்கான கேள்விகள் பள்ளி செல்லும் குழந்தைகளிடமும் அவர்களது பெற்றோர்களிடமும் முன்வைக்கப்பட்டன. மொத்தம் 16 இடங்களிலிருந்து, (ஒவ்வொரு குடிசைப் பகுதி/கிராமத்திலிருந்தும் 5 பேர் வீதம்) மொத்தம் 80 பேர் திட்டமிட்டு பொறுப்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆண், பெண் மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### உரிமையின் உண்மை

சமூக அளவில் நடத்தப்பட்ட இந்த ஆய்வு கல்வி உரிமைச் சட்டம் குறித்த விழிப்புணர்வு மிக மிகக் குறைவாக இருப்பதைக் காட்டியது. தங்களது குழந்தைகளுக்கான கல்வி ஒரு அடிப்படை உரிமையாக சட்டப்படி, அரசமைப்பு சாசனத்திலேயே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதே யாருக்கும் தெரியவில்லை. ஆயினும், இத்தகைய ஒரு சட்டம் நடைமுறையில் இருக்கிறது என்பதை சில ஆசிரியர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

### பள்ளிகளில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகள்

பெரும்பாலான பள்ளிகளில் கட்டடம், நூலகம், கழிப்பறைகள், சமையலறை, விளையாட்டு மைதானம் போன்ற அடிப்படை உள்கட்டமைப்புகள் இருக்கின்றன.

**பட்டியல் 1: உத்தர பிரதேச மாநில தகவல்கள்**

| | |
|---|---|
| நிலப்பரப்பு (சதுர கி.மீ.) | 2,40,928 sq km |
| மக்கள்தொகை (கணக்கெடுப்பு 2011) | 19,98,12,341 |
| ஆண்கள் | 10,44,80,510 |
| பெண்கள் | 95,53,31,831 |
| மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் | 20.23% |
| நகரப்புறம் | 77.73% |
| கிராமப்புறம் | 22.27% |
| மக்கள்தொகை அடர் தி/கி.நீ.[2] | 829 |
| பாலின விகிதம் | 1000 ஆண்களுக்கு 912 பெண்கள் |
| எழுத்தறிவு | 67.68% |
| ஆண்கள் | 77.28% |
| பெண்கள் | 51.36% |
| கிராமப்புறம் | 65.64% |
| நகர்ப்புறம் | 75.14% |
| கஞ்வி நிறுவனங்களின் எண்ணிக்கை | |
| தொடக்கப்பள்ளிகள் (2014) | 2,40,332 |
| நடுநிலைப் பள்ளிகள் (2014) | 22,853 |
| கலைக் கஞ்லூரிகள் (2002–03) | 940 |
| மரு துவக் கஞ்லூரிகள் (2009) | 21 |
| அரசு பொறியியஞ்கஞ்லூரிகள் (2012) | 15 |
| தனியார் பொறியியஞ்கஞ்லூரிகள் (2014) | 369 |

ஆதாரம்: மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் / மற்றும் இதர அமைப்புகள்

ஆனால், பெரும்பாலான பள்ளிகளில் வகுப்பறைகள் போதுமானதாக இல்லை. ஒரே அறையில், ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

கழிப்பறை வசதி உள்ள பெரும்பாலான பள்ளி வளாகங்களில், மாணவர்கள் அவற்றைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவதில்லை. 83.75 சதவீத கழிப்பறைகள் மாணவர்களால் பயன்படுத்தப்படுவதில்லை, அவை பூட்டப்பட்டிருக்கின்றன. அதேபோல், 2.50 சதவீத கழிப்பறைகள் பெண் குழந்தைகளுக்கு என்று தனியாக ஒதுக்கப்படுகின்றன. பெரும்பான்மையான பள்ளிகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி கழிப்பறைகள் இல்லை. அப்படியே இருந்தாலும் அவற்றை ஆசிரியர்கள் மட்டுமே பயன்படுத்துகிறார்கள். வகுப்பறைகளை மாணவர்கள்தான், குறிப்பாக மாணவிகள்தான் சுத்தம் செய்கிறார்கள்.

72.5 சதவீத பள்ளிகள் குழந்தைகளின் குடியிருப்புப் பகுதிகளிலிருந்து அரை கிலோ மீட்டருக்குக் குறைவான தொலைவில் அமைந்துள்ளன. 23.75 சதவீதப் பள்ளிகளில் அரை கிலோ மீட்டரிலிருந்து 1 கிலோ மீட்டர் வரையிலான தொலைவுக்குள் உள்ளன. 3.75 சதவீதப் பள்ளிகள் 1 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளன. இந்தச் சட்டத்தின்படி பள்ளிகள் குழந்தைகளின் குடியிருப்புகளுக்கு அருகமைப் பகுதிகளில் இருக்க வேண்டும். ஆகவே, இங்கே குழந்தைகள் கல்வி பெறுவதற்கு பள்ளிக்கூடம் அமைந்துள்ள இடத்தின் தொலைவு என்பது ஒரு தடையாக இல்லை.

## ஆசிரியர்கள்

ஆசிரியர்கள் சரியான நேரத்திற்கு வருகிறார்களா, பள்ளியில் இருக்கிறார்களா என்பது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. ஆசிரியர்கள் வருகிற நேரம் மாறுபட்டாலும் கூட அவர்கள் தொடர்ச்சியாக வருகிறார்கள் என்பது தெரிய வருகிறது. அவர்கள் தங்களது வசதிக்கேற்ப பள்ளிக்கு வருகிறார்கள். ஆசிரியர்களில் 20 சதவீதம் பேர் மட்டுமே தொடர்ச்சியாக கற்பிக்கிறார்கள். 15 சதவீதத்தினர் பாடம் எடுப்பதேயில்லை. 52 சதவீத ஆசிரியர்கள் சில நேரங்களில் மட்டும்தான் வகுப்பெடுக்கிறார்கள், தொடர்ச்சியாக அல்ல. ஆசிரியர்கள் தொடர்ச்சியாக பள்ளிக்கு வருவதில்லை என்பதோடு, மூன்றில் ஒரு பங்கு ஆசிரியர்கள் தனிப்பட்ட உரையாடல்களிலும், மற்றவர்கள் வேறு வகையான வேலைகளிலும் ஈடுபடுகிறார்கள் என கண்டறியப்பட்டுள்ளது. சுமார் 16 சதவீத ஆசிரியர்கள் குளிர்காலத்தில் ஸ்வெட்டர் பின்னுகிறார்கள், மற்ற பருவகாலங்களில் சும்மா உட்கார்ந்திருக்கிறார்கள்.

## மாணவர் – ஆசிரியர் விகிதம்

அரசாங்கம் நடத்துகிற தொடக்கப் பள்ளிகளில் 67 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம், அதாவது 67:1, இருப்பதை ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன. அதாவது, கல்வி உரிமைச் சட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகும் நிலைமையில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதை இது காட்டுகிறது. சட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஒரு பெரும் முட்டுக்கட்டையாக இருப்பது தகுதி உள்ள ஆசிரியர்கள் இல்லை என்கிற பிரச்சனைதான். கிட்டத்தட்ட எல்லா பள்ளிகளிலும் போதுமான ஆசிரியர்கள் இல்லை. அரசாங்க விதிகளின்படி தேவைப்படுகிற எண்ணிக்கையைவிடக் குறைவாகவே ஆசிரியர்கள் உள்ளனர்.

இதனால், பெரும் பாதிப்புக்குள்ளாவது கல்வியின் தரம்தான். அநேகமாக இதற்கு ஒரு காரணம், ஆசிரியப் பணிக்கு வந்துள்ளோர், தங்களது வகுப்பறைகளில் உள்ள குழந்தைகள் தங்களுடைய சாதிக்காரர்களோ, தங்களது மதத்தைச் சேர்ந்தவர்களோ அல்ல என்ற காரணத்தால், குறிப்பாக அந்தக் குழந்தைகள் ஆதிக்க சாதிகளைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதால் கண்டுகொள்ளாத நிலைதான் தொடர்கிறது. அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் பயில்கிற மாணவர்களில் மிகப்பெரும்பாலானோர் விளிம்புநிலை சமூகங்களிலிருந்து வந்தவர்களாகவே உள்ளனர். ஒப்பீட்டளவில் வசதி உள்ள ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த குழந்தைகள் தனியார் பள்ளிகளுக்குச் செல்கிறார்கள். இத்தகைய நிலைமையின் காரணமாக மிக மோசமான பாதிப்புக்கு உள்ளாகிறவர்கள் பெண் குழந்தைகள்தான். பல பெண் குழந்தைகள் தாங்கள் சாதி அடிப்படையிலும், பாலின அடிப்படையிலும் பாகுபடுத்தப்படுவதாக உணர்கிறார்கள்.

முதலாம் வகுப்பில் மொத்தம் 741 குழந்தைகள் பயில்கிறார்கள். அவர்களில் 380 பேர் ஆண்கள், 361 பேர் பெண்கள். மேலும், இந்த 741 குழந்தைகளில் 27 பேர் மட்டுமே "பொது" பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். 232 பேர் பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள். 220 பேர் பட்டியல் சாதிகளைச் சேர்ந்தவர்கள். 262 பேர் முஸ்லிம்கள். ஆகவே, முதல் வகுப்பில் பட்டியல் சாதிகள், பிற்படுத்தப்பட்டோர், முஸ்லிம் சமூகங்களிலிருந்து வந்த குழந்தைகள் 96.35 சதவீதத்தினர் உள்ளனர். விளிம்புநிலை சமூகங்களிலிருந்து 20 குழந்தைகள் வருகிறார்கள் என்றால், பொதுப் பிரிவிலிருந்து வருவது ஒரு குழந்தை மட்டுமே. மாணவர் விகிதாச்சாரம் இப்படி இருப்பதால்தான், அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளின் நிலைமை புறக்கணிக்கப்பட்டதாகவும் கவலைக்குரியதாகவும் இருக்கிறது.

## சாதி, மதம், பாலினம்

62.50 சதவீத மாணவர்கள் அவர்களை பாலினம், சாதிய, மதம் என்ற அடிப்படைகளில் தாங்கள் பாகுபடுத்தப்படுவதாக உணர்கிறார்கள். ஆசிரியர்களின் நடத்தை இந்த பாகுபாடுகளால் தீர்மானிக்கப்படுகிறது. சமுதாயத்தில் காலம் காலமாக மிகப்பரவலாக நிலவி வரும் இந்த சமூகப் படிநிலை சார்ந்த மனப்போக்கும், அணுகுமுறையும் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையேயான உறவுகளை

**பட்டியல் 2: லக்னோ மாவட்டம் – ஒரு பார்வை**

| | |
|---|---|
| நிலப்பரப்பு (சதுர கி.மீ.) | 2,528 |
| மக்கள்தொகை<br>மொத்த நபர்கள் | 45,89,838 |
| ஆண்கள் | 23,94,476 |
| பெண்கள் | 21,95,362 |
| மக்கள்தொகை வளர்ச்சி | 25.82% |
| கிராமப்புறம் | 15,50,842 |
| நகர்ப்புறம் | 30,38,996 |
| மாநில மக்கள்தொகையோடு உள்ள விகிதம் | 2.30% |
| மொ த குடும்பங்கள் | 8,52,187 |
| பாலின விகிதம் (1000 ஆண்களுக்கு பெண்களின் எண்ணிக்கை) | 917 |
| பாலின விகிதம் (0–6 ஆண்டுகள்) | 915 |
| பட்டியஞ்சாதிகள் மக்கள்தொகை | 9,48,294 |
| மொ த மக்கள் தொகையிஞ்விகிதம் | 20.66 |
| பட்டியஞ்பழங்குடியினர் மக்கள்தொகை | 7,506 |
| மொ த மக்கள் தொகையிஞ்விகிதம் | 0.16 |
| குழந்தைகளின் விகிதம் (0–6 வயது) | 11.84% |
| ஆண் குழந்தைகளின் விகிதம் | 11.86% |
| பெண் குழந்தைகளின் விகிதம் | 11.83% |
| முக்கிய நகரங்கள்<br>லக்னோ (மாநகராட்சி) | 28,15,601 |
| **எழுத்தறிவு மற்றும் தொடக்கப்பள்ளிகள் எண்ணிக்கை** | |
| எழுத்தறிவு பெற்ற நபர்கள் எண்ணிக்கை | 31,27,260 |
| ஆண்கள் | 17,42,440 |
| பெண்கள் | 13,84,820 |
| எழுத்தறிவு பெற்றோர் விகிதம் | 77.29 |
| நபர்கள் | |
| ஆண்கள் | 82.56 |
| பெண் கள் | 71.54 |
| பள்ளிகள்<br>அரசு தொடக்கப்பள்ளிகள் | 1,403 |
| அரசு மேல்நிலை தொடக்கப் பள்ளிகள் | 478 |

ஆதாரம்: மக்கள்தொகை கணக்கெடுப்பு 2011

பாதிக்கிறது. வகுப்பறைகளில் உள்ள குழந்தைகளின் பின்னணிகளைப் பொறுத்தும், மாணவர்களின் சமூகப் பொருளாதார பின்னணியைப் பொறுத்தும் பாகுபாடு மட்டங்கள் மாறுபடுகின்றன.

**பட்டியல் 3: ஆய்வு செய்யப்பட்ட தொடக்கப் பள்ளிகளில் மாணவர் – ஆசிரியர் விகிதம்**

| வ. எண். | தொடக்கப் பள்ளியின் பெயர் | மொத்த மாணவர்கள் | மொத்த ஆசிரியர்கள் | மாணவர் – பெற்றோர் விகிதம் (தோராயமாக) |
|---|---|---|---|---|
| 1. | பராவ்ரா | 275 | 2 | 138:1 |
| 2. | பஸ்தாவுலி | 295 | 3 | 99:1 |
| 3. | காவுர் பீத் | 222 | 2 | 111:1 |
| 4. | பாந்தோதோலா | 423 | 3 | 141:1 |
| 5. | பாரப்கானா | 80 | 2 | 40:1 |
| 6. | பல்தான் சாவணி | 232 | 4 | 58:1 |
| 7. | ஷாபூர் | 82 | 2 | 41:1 |
| 8. | நாபுஸ்தா காலா | 131 | 3 | 44:1 |
| 9. | சந்தன் காவுன் | 144 | 3 | 48:1 |
| 10. | பாதேபூர் காவுன் | 161 | 4 | 41:1 |
| 11. | பல்ராம் நகர் | 288 | 5 | 58:1 |
| 12. | பிதாவுலி குர்த் | 131 | 4 | 33:1 |
| 13. | பீவி கஞ்ஜ் | 172 | 5 | 35:1 |
| 14. | கோல்லா | 185 | 1 | 185:1 |
| 15. | கோர்வாமாவ் | 228 | 2 | 114:1 |
| 16. | தசாவுளி | 79 | 2 | 40:1 |
| | **மொத்தம்** | **3,128** | **47** | **67:1** |

### கல்வி உதவி நிதிகளும் இதர வசதிகளும்:

அடிப்படையான கல்விச் சாதனங்கள் இல்லை என்பதற்காக குழந்தைகள் கல்வி கற்பது நின்றுவிடாமல் தொடர்வதற்காக பள்ளி நிர்வாகங்கள் அடிப்படையான வசதிகளை வழங்குகின்றன. ஆடைகள், புத்தகப் பைகள், புத்தகங்கள், கல்வி உதவி நிதிகள் போன்றவை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. பெரும்பாலும் எல்லா பள்ளிகளிலும் புத்தகங்களும் ஆடைகளும் பைகளும் வழங்கப்படுகின்றன. ஆனால், அட்டவணை 1ல் காட்டியுள்ளபடி கல்வி உதவி நிதி மாறுபடுகிறது. 92.5 சதவீதப் பள்ளிகளில் மாணவர்களுக்கு கல்வி உதவி நிதி வழங்கப்படுகிறது. மீதியுள்ள 7.5 சதவீதப் பள்ளிகளில் இது வழங்கப்படுவதில்லை. மொத்தமுள்ள மாணவர்களில் 80 சதவீதத்தினருக்கு ரூ.300 கல்வி உதவி நிதி வழங்கப்படுகிறது. ஆனால், 20 சதவீத குழந்தைகளுக்கு இதைவிட குறைவான தொகையே கிடைக்கிறது. குழந்தைகள் முதல் முறையாக சேர்க்கப்படும்போதும், ஒவ்வொரு முறை தேர்வு வருகிற போதும் பள்ளி நிர்வாகங்கள் குழந்தைகளிடமிருந்து கட்டணம் வசூலிக்கின்றன என்பதை கள ஆய்வுக் காட்டுகிறது. இது பள்ளிக்குப் பள்ளி மாறுபடுகிறது. சேர்க்கைக் கட்டணம் ரூ.20 முதல் ரூ.35 வரையிலும் வசூலிக்கப்படுகிறது. தேர்வுக் கட்டணமாக ரூ.15 முதல் ரூ.20 வரை வசூலிக்கப்படுகிறது.

### பள்ளி நிர்வாகக் குழுக்கள்

பள்ளிகளை சிறந்த முறையில் நிர்வகிக்க சமூகமும் பெற்றோர்களும் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்று கல்வி உரிமைச் சட்டம் கூறுகிறது. 11.25 சதவீதப் பள்ளிகளில் பள்ளி நிர்வாகக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 88.75 சதவீதப் பள்ளிகளில் அத்தகைய ஏற்பாடு எதுவும் இல்லை. ஆக, பள்ளி நிர்வாகக் குழுக்கள் என்பவை காகிதத்தில்தான் இருக்கின்றனவேயன்றி நடைமுறையில் இல்லை என்பது கண்கூடாகத் தெரிகிறது.

### இடைநிற்றல்

ஒரு அருகமைப் பள்ளியில், தொடக்கப்பள்ளி வகுப்புகளை முடிக்கும் வரையில் இலவச, கட்டாய கல்வியைப் பெறுவது ஒவ்வொரு குழந்தைக்கும் உள்ள உரிமை என்று இந்தச் சட்டம் கூறுகிறது. ஆனால், தொடக்கக் கல்வியை முடிப்பது என்பது முழுமையாக நிலைபெறவில்லை. பெரும்பாலான பள்ளிகளில் முதல் வகுப்பில் சேரும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. ஆனால், அடுத்தடுத்த ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை கணிசமாக சரிவடைகிறது. 5ம் வகுப்பு வரை மாணவர்கள் தொடர்ந்து பயில்வது என்பது மிகக் குறைவாகவே உள்ளது. ஆனால், இடைநிற்றல் விகிதம் அதிகமாக இருக்கிறது. இது இந்தச் சட்டம் செயலாக்கப்படுவதன் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்குகிறது.

## முடிவும் ஆலோசனைகளும்

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பள்ளிகளில் சுமார் 44 சதவீதப் பள்ளிகள் பெண்களுக்கு தனி கழிப்பறை வசதிகளைப் பெற்றிருக்கவில்லை. எல்லா பள்ளிகளிலுமே நூலகம் இல்லை. 60 சதவீதப் பள்ளிகளில் ஆசிரியர் – மாணவர் விகிதம் சட்டப்படி இருக்க வேண்டிய 1:30 என்ற விகிதத்தில் இல்லை. 28 சதவீதப் பள்ளிகளில் விளையாட்டு மைதானம் இல்லை. 16.6 சதவீதப் பள்ளிகளில் குடிநீர் வசதி செய்யப்படவில்லை. சுமார் 45 சதவீதப்பள்ளிகளில் சுற்றுச்சுவர் இல்லை. இரண்டாம் வகுப்பு, நான்காம் வகுப்பு குழந்தைகள் ஒன்றாக ஒரே வகுப்பறையில் உட்காருகிறார்கள். சாதி, மத அடிப்படையில் குழந்தைகளைப் பாகுபடுத்துவது நடைமுறையில் இருக்கிறது. கல்வி உரிமைச் சட்டம் குறித்த விழிப்புணர்வு இந்த சமூகங்களிடையே மிகக்குறைவாகவே உள்ளது. பள்ளி நிர்வாகக் குழுக்கள் பற்றி குழந்தைகளின் பெற்றோர் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இருக்கிற பள்ளி நிர்வாகக் குழுக்களின் செயல்பாடுகளும் பயனுள்ளதாக இல்லை. இலவச, கட்டாயக் கல்வி உரிமை சட்டத்தின் நோக்கம் முற்றிலும் நிறைவேறவே இல்லை.

இவ்வாறு ஏராளமான பின்னடைவுகள் இருக்கும் நிலையில் அனைவருக்கும் கல்வி என்ற இலக்கு எட்ட முடியாத, கண்துடைப்பு ஆகிறது.

ஆகவே, உடனடியாக தேவைப்படுவது அவசரமும் வலிமைமான பள்ளி கல்விக்கான இயந்திரத்தனமே ஆகும். குறிப்பாக அடிமட்டங்களில் இது கட்டாயமாகத் தேவைப்படுகிறது. மேலும், கல்வி உரிமைச் சட்டத்தின் பல்வேறு அம்சங்களை செயல்படுத்துவதற்கு, சமூக மட்டத்தில் மிகப்பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது. தங்களுக்கு உரிய சட்டப்பூர்வ ஏற்பாடு என்ன என்பதற்கு எந்த அளவுக்கு ஒரு சமூகத்திற்குத் தெரிய வருகிறதோ, அந்த அளவுக்கு அந்தச் சமூகத்தால் அந்த உரிமைகளைக் கோர முடியும். இதுவே இந்தச் சட்டம் வெறும் எழுத்தாக மட்டுமல்லாமல், உயிர்ப்போடும் இருக்கச் செய்வதற்கு இட்டுச் செல்லும். தரமான கல்விக்கான மற்றொரு அம்சம் ஆசிரியர்களின் பணி நிலைமைகளாகும். ஆசிரியர்களுடைய பணப் பலன்களில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பது, அவர்களது கடமை உணர்வை பாதிக்கிறது. மேலும், ஆசிரியர்கள் கல்வி சாராத வேறு பணிகளில் ஈடுபடுத்தப்படக்கூடாது என்று சட்டம் சொல்கிறது என்றாலும், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, பேரிடர் நிவாரணம், தேர்தல் பணிகள் போன்றவற்றிற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கல்வி உரிமைச் சட்டம், அதன் பல்வேறு ஏற்பாடுகள் ஆகியவற்றின் நோக்கங்களை அடைவதற்கும், அவற்றை வலுப்படுத்துவதற்கும் பின்வரும் ஆலோசனைகள் உதவக்கூடும்:

1) கல்வி உரிமைச் சட்டத்தில் தற்போதுள்ள ஏற்பாடுகள் பயனுள்ள முறையில் செயல்படுத்தப்பட வேண்டும். இதில், குடிமைச் சமூகத்தை ஈடுபடுத்துவது சட்டம் செயலாக்கப்படுவதை வலுப்படுத்த உதவும்.

2) ஒவ்வொரு பள்ளியிலும், சட்டவிதிகளின்படி குறைந்தபட்ச மாணவர் – ஆசிரியர் சதவிகிதம் பராமரிக்கப்பட வேண்டும். அதிகமான தகுதி உள்ள பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிப்பதன் மூலம் இதைச் சாதிக்க முடியும்.

3) பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த போதிய நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டும்.

4) இந்தச் சட்டத்தை அதிக பயனுள்ளதாக மாற்றுவதற்கு, சட்டத்தை பாதுகாப்பதற்கான நடைமுறை முன்மாதிரிகள் உருவாக்கப்பட வேண்டும். சட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள குறைபாடுகளை நீக்க ஒரு அமைப்புமுறை ஏற்படுத்தப்பட வேண்டும்.

5) கூடுதல் வயதுள்ள குழந்தைகளை சேர்த்துக்கொள்வதற்கான ஒரு விதி சட்டத்தில் இருக்கிறது என்றாலும், நடைமுறையில் அப்படி நடப்பதில்லை. ஆகவே, இலக்குகளை எட்ட வேண்டுமானால் குடிமைச் சமூக அமைப்புகளின் உதவியோடு முறையான, தளமட்டத்திலான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

6) அனைவருக்கும் சமமான, தரமான கல்வி என்ற இலக்கை எட்டுவதற்கு ஒரு சிறந்த கொள்கை, வலுவான அரசியல் உறுதிப்பாடு, உன்னதமான செயலாக்கம், அதிகபட்ச சமூக ஈடுபாடு போன்ற பன்முகத்தன்மையுள்ள பரிமானங்கள் தேவை.


7) ஆசிரியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட பணியிடங்கள், உடனடியாக நிரப்பப்படுவதை மாநில அரசுகள் உறுதிப்படுத்தும் வகையில் தொடர்ச்சியாக வலியுறுத்த வேண்டும்.

ஆதாரம்: **Economic and Political Weekly,** January 31, 2015 VOL L NO.5

For Private Circulation Only

## 2013ல் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்கள்

(அகில இந்திய அளவில் 58, 224)




குற்றச் சம்பவங்கள் (வழக்குகளின் எண்ணிக்கை)

- 100 வரையில்
- 101 – 100
- 1,001 – 2,000
- 2,001 – 4,000
- 4,001 – 6,000
- 6000த்திற்கு மேல்

*Education Material Published on behalf of*


**Tamil Nadu Child Rights Protection Network by**
**Human Rights Advocacy and Research Foundation (HRF)**

*# 54, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, India.*
*☎ 22353503, 22351919 Fax : 22355905,*
*E-mail : humanrightsadvocacyandresearch@gmail.com*
*website : www.humanrightsfoundation.org.in*